# தமிழரசு கட்சியின் கொள்கைபற்றி வானொலியில் ஒலிபரப்ப ஒழுங்கு செய்ய வேண்டுமாம்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப்பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 201
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும் தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆவணி 16 ஜ: ஆகிர் 18 திங்கட்கிழமை [1-9-69]

## உடுவில் எம். பி. ஆட்சிமன்றத்தில் பேச்சு

கொழும்பு, திங்கள்

சமஷ்டிக்கட்சியின் கொள்கையை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை ஒழுங்கு செய்துகொடுக்க வேண்டுமென இன்று ஆட்சிமன்றத்தில் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கேட்டுக் கொண்டார். இலங்கையில் பெரும்பாலான பத்திரிகைகள் தமிழரசுக்கட்சியின் நோக்கம் சமஷ்டிப் பிரிவினைக்கு வித்திடுவதாக அமைந்துள்ளது என பிரசாரம் செய்துவருவதினால் நாட்டு மக்கள் தமிழரசுக் கட்சியை வேறு கண் கொண்டு பார்ப்பதாகவும், இதை தெளிவுபடுத்துவதற்கு இரண்டு கிழமைக்கு ஒரு முறையாவது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தை ஒழுங்கு செய்துதரவேண்டும் என்றும் கூறினார்.

டாக்டர் தகநாயக்கா பிரதம மந்திரியாக இருந்த போது தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிகளின் பிரசாரத்துக்காக இலங்கை ஒலிபரப்பு உபயோகிப்பதற்கு அனுமதி வழங்கியிருந்ததை திரு. தர்மலிங்கம் நினைவுபடுத்தி அதைப்போலல்லாது இப்போது சாதாரண நாட்களிலும் அவ்வித வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தினார்.

தமிழ்நிகழ்ச்சிகளில் 70 சதவீதம் இசைத்தட்டுக்களையே ஒலிபரப்புவதாக திரு. அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டி, உள்ளூர் தமிழ் கலைஞர்கள், வித்துவான்களுக்கு இதில் சந்தர்ப்பம் கொடுக்கப்பட வேண்டும் என்றார். சிங்கள கலைஞர்களின் இசைத் தட்டுக்கள் ஒலிபரப்பப்படும் இதே வேளையில் தமிழ்க்கலைஞர்கள் புறக்கணிக்கப்படுவதாகக் கூறினார். பரந்தனில் ஒலிபரப்பு நிலையத்திற்கான அத்திபாரக்கல் நாட்டப்பட்டதுடன் நின்றுவிட்டது என்றும் இதற்கு உடனடி நடவடிக்கைவேண்டும் என்றும் அவர் சொன்னார்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்தின் நோக்கத்துக்காகவே உபயோகிக்கப்பட்டுவருவதாக எதிர்க்கட்சியினர் சுமத்திய குற்றச்சாட்டை தகவல் ஒலிபரப்பு அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி மறுத்துப் பேசினார்.

டாக்டர் என். எம். பெரேரா பேசுகையில், சி. டபிள்யு. ஈ. கடுவாடு விநியோகத்தில் ஊழல் இருக்கிறது என்றார். கடுவாடு வியாபாரிகளில்லாக, 4, 5 பேருக்கு கோட்டா வழங்கப்பட்டுள்ளது என்று பெயர்களைச் சுட்டிக்காட்டினார்.

ஹபரதுவ எம். பி. திரு. பிறின்குணசேகரா பேசுகையில் சில பத்திரிகைகள் செயல்படும்விதம் அரசாங்கத்தால் விசாரணைசெய்யப் படவேண்டும் என்றார்.

## தமிழ்தாதிமார் சார்பில் பிரதமருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், திங்கள்

"ஆஸ்பத்திரி தமிழ் தாதிமார்களின் கடமை நேரங்களைக் குறைக்கவேண்டும். அல்லது அவர்களது சிங்களத்தேர்ச்சிப் பரீட்சையை இலகுவாக்க வேண்டும்."

இவ்வாறு தெரிவிக்கப்பட்ட கடிதமொன்றை தமிழ்த்தாதிமார்களின் சார்பில் அகில இலங்கை தாதிமார் சங்கக் காரியதரிசி பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்காவுக்கு அனுப்பி வைத்துள்ளார்

தாதிமார்களின் கடமையிலுள்ள கஷ்டங்களையும், கடமை நேர அட்டவணைகளையும் பரிசீலனைசெய்து அவர்களுக்கான சிங்களத் தேர்ச்சிப்பரீட்சையையிலகுவாக்க வேண்டுமென இக் கடிதத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தாதிமார்கள் இரவில் 12 மணிநேரம் கடமையாற்றுகின்றார்கள் பகலில் கடமை நேரங்கள் அடிக்கடி மாறுகின்றன. இந்தக் கஷ்டங்களால் கிரமமாக சிங்களம் படிக்கமுடியாது. தேர்ச்சி பெறாவிட்டால் பதவி உயர்திகம், சம்பள இக்கஷ்டங்களை அனுசரித்து தாதிமார் சிங்கள மொழித் தேர்ச்சிப் பரீட்சையை இலகுவாக்க வேண்டும்.

(கா. நி.)

## சங்கானை கொலை முயற்சி வழக்கில் 1ம் எதிரியும் விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

சங்கானை கொலைமுயற்சி வழக்கில் 1ம் எதிரியான ஆறுமுகம் தேவராசா நேற்று விடுதலை செய்யப்பட்டார் ஜூரி சபையினர் 6—1ஆக பிரிந்து எதிரி குற்றவாளியல்லவென்று தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து நீதியரசர் எதிரியை விடுதலை செய்தார். 2-ம் எதிரியான கணபதி இராஜரத்தினம் நேற்றுமுன்தினம் விசாரணை நடுவில் விடுதலை செய்யப்பட்டார்

இவ் வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஏ. சி அலஸ் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது,

இவ் வழக்கில் சங்கானை கிழக்கில் 1966ம் ஆண்டு மே மாதம் 10ம் தேதி கந்தையா மகாலிங்கம் என்ற வாலிபரை துப்பாக்கியால் ராஜா, கணபதி ராஜரத்தினம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது

எதிரிகளுக்காக வழக்கறிஞர் அ. விஸ்வநாதன் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரியதரப்பில் பிரியாந்த பெரேரா ஆஜரானார்.

அசைஸ் விசாரணை இம் மாதம் 4-ம் தேதிவரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## மாநகரசபை கலைக்கப்பட்டது

கோட்டை, திங்கள்

நுவரெலியா மாநகர சபை வெள்ளிக்கிழமையன்று கலைக்கப்பட்டது. உள்ளூராட்சி அமைச்சர் இம் மாநகரசபை கலைக்கப் பட வேண்டுமென்ற அறிவித்தலை விசேஷ அரசாங்க வர்த்தமானிமூலம் வெளி

# வெங்காய பிரச்னைபற்றி ஆராய விசேஷ குழு நிறுவப்படும்

## கமத்தொழில் சேவைகள் ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், திங்கள்

**வெங்காய உற்பத்தி சம்பந்தமான பிரச்னைகளை ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுப்பதற்காக ஒரு விசேஷ குழு அமைக்கப்படும். இதுபற்றி அரசாங்கம் ஆலோசனை நடத்திவருகின்றது.**

இத்தகவலை நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணம் வந்த கமத்தொழில் சேவைகள் ஆணையாளர் திரு. எஸ் பி சேனநாயக்கா தெரிவித்திருக்கிறார்

இந்தக்குழுவில் வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சமாஜத்தின் சார்பில் ஒரு பிரதிநிதியை நியமிக்கும்படி உணவு அமைச்சருக்கு சிபார்சு செய்யப்போவதாகவும் திரு. சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

கமத்தொழில் சேவைகள் ஆணையாளர் திரு எஸ். பி. சேனநாயக்கா சனிக்கிழமையன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். யாழ்ப்பாணத்திலிருந்து வெங்காயம் கொள்வனவு நிறுத்தப்பட்டதன் காரணமாக வடபகுதி விவசாயிகளுக்கேற்பட்ட கஷ்டத்தைப்போக்க வடபகுதி வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மேற்கொண்ட அவசர நடவடிக்கையால் வெங்காய உற்பத்தி, கொள்வனவு, விவசாயிகள் [illegible]ம் ஆகியவற்றை நேர[illegible]கப் பார்த்து சரியான தகவல்களை அறிவதற்காக திரு. [illegible]யக்கா வந்துள்ளார். இதுசம்பந்தமாக ஆணையாளர் வடபகுதி [illegible]

## "தரமான கவிஞர்கள் ஈழத்தில் இருக்கின்றனர்"

வெள்ளவத்தை, ஞாயிறு

'ஈழத்துக் கவிஞர்கள் சமுதாயப் பிரச்னைகளை முன்வைத்துப் பாடுவதில் முன்னிற்கிறார்கள். தமிழகத்தில் பாரதியையும் பாரதிதாசனையும் அடியொற்றிப் பிறந்த கவிஞர்கள் இன்றும் காற்றையும், கடலையும்விண்ணையும் வைத்துப்பாடி மகிழ்கிறார்கள். இவர்களைவிட எமது கவிஞர்களிடம் இன்றைய சமூகப் பிரச்னைகளை முன்வைத்து ஆராயும் துடிப்பு மிகுதியாக உள்ளது. இது நல்லதோர் வளர்ச்சியாகும். ஈழத்துக் கவிதையை ஆராயும்போது நாம் பூதந்தேவனார் காலத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டிய அவசியமில்லை. சுமார் 20 அல்லது 30 வருடங்களுக்கு முன்பிருந்து ஆரம்பித்தாலே போதுமானது. பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் பின்வந்தவர்கள் அவர்களது [illegible]

பேசுகையில் 'கவிஞர் இ. சிவானந்தன் பலதுறை அனுபவம் மிக்கவர். அறிவியல் ஆற்றல் மிக்க இவரது கவிதைகளில் புதுமை மிளிர்வதை காண்கிறேன்' என்றார்.

'கண்டறியாதது' நூல் வெளியீட்டு விழாவையொட்டி நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் நுஃமான் சில்லையூர் செல்வராசன், அம்பி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சரஸ்வதி மண்டபத்தில் வைத்து கண்டறியாதது கவிதைநூல் விற்பனை செய்யப்பட்டது.

## பாட்டத் பதவி ஏற்றார்

புதுடில்லி, ஆக. 3

இந்தியாவின் உப ஜனதிபதியாக திரு. பாட்டத் இன்று காலை பத

## பத்திரிகையை [illegible] ஆக்கும்படி கோரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிய அவசியமில்லை. சுமார் 20 அல்லது 30 வருடங்களுக்கு முன்பிருந்து ஆரம்பித்தாலே போதுமானது. பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் பின்வந்தவர்கள் அவர்களது தாக்கத்திற்கு உட்பட்டது இயல்பே. எம்மிடம் தரமான கவிஞர்கள் இருக்கிறார்கள்''

இவ்வாறு கலாநிதி திரு க. கைலாசபதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இ. சிவானந்தனின் 'கண்டறியாதது' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பேசுகையில் கூறினார்.

திரு அ. சண்முகதாஸ்

## ஏற்றார்

புதுடில்லி, ஆக. 3

இந்தியாவின் உப ஜனாதிபதியாக திரு. பாட்டத் இன்று காலை பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். ஜனாதிபதி திரு. வி. வி. கிரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். பிரதம மந்திரியும் இதரப் பிரமுகர்களும் திரு. பாட்டத்தைப் பாராட்டினர்கள். ஜனாதிபதி உப ஜனாதிபதிக்கு தேநீர் விருந்தளித்தார்.

# பத்திரிகையை கூட்டுஸ்தாபனம் ஆக்கும்படி கோரிக்கை

## பாரத பத்திரிகையாளர் சங்கம் கடிதம்

புதுடில்லி, ஆக. 31

பாரதப் பத்திரிகைகளையும், செய்தி ஸ்தாபனங்களையும் பொது ஸ்தாபனமாக்கி அவற்றை கூட்டுஸ்தாபனமாக்கும்படி அகிலபாரத பத்திரிகையாளர் சங்கம் பாரதப் பிரதம மந்திரியிடம் கேட்டுக்கொண்டுள்ளது. மேற்படி சங்கம் திருமதி இந்திராகாந்திக்கு எழுதிய கடிதமொன்றில் பத்திரிகைகளைக் கூட்டுஸ்தாபனமாக்கி பங்குகளை ஊழியருக்கு மாற்றிக்கொள்ளலாம் என்ற யோசனை கூறியுள்ளது.

பத்திரிகைகளை அரசு உடமையாக்கும் திட்டம் அரசாங்கத்துக்கு இல்லை என்று ஏற்கனவே கூறிவிட்டதாக் தகவல் அமைச்சர் திரு. குஜராத் பத்திரிகையாளர்சங்கத்துக்குத் தெரிவித்துள்ளார்.

## விலையேற்றம்

மட்டுவில், சனி

நாட்டில் நல்ல மழை பெய்யப் பெய்ய அரிசியின் விலையும் உயர்ந்து வருகிறது.

சாவகச்சேரிப் பகுதியில் இதுவரை ஒருபடி அரிசி 1 ரூபா 25 சதமாக விற்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றையிலிருந்து, அரிசி படி 1 ரூபா 50-தாக உயர்ந்துள்ளது. இதற்குக் காரணம் மழைதான் என்று கூறுகிறார்கள். இப்படி மழையைக் கண்டதும் அரிசி விலையை உயர்த்துவதின் காரணமாகத்தான் இதுவரை காலமும் நமது நாட்டில் மழை இல்லாதிருந்ததோ என்றும், மக்களுக்கு சந்தேகம் அதிகரித்துள்ளது.

[illegible] பார்த்து சரியான தகவல்களை அறிவதற்காக திரு. சேனநாயக்கா வந்துள்ளார்.

இதுசம்பந்தமாக ஆணையாளர் வடபகுதி [illegible] உட்பத்தியாளர் [illegible]கள் கூட்டுறவு சமாஜத்தில் நிர்வாகசபை அங்கத்தவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர் சமா

(4-ம் பக்கம் பார்க்க)

## "கத்தியால் பல முறை குத்தினர்"

மட்டுவில், ஞாயிறு

''உன் அண்ணாவிற்கு சுகமில்லையாம், உன்னை அவசியம் கூட்டி வரும்படி என்னை அனுப்பினர் சீக்கிரம் புறப்படு, என்று கூறியபடி என் வீட்டிற்கு வந்தவர் என்னை அறைக்குள் இழுத்துப் பூட்டி விட்டு கத்தியால் பலதடவை குத்தினர்''

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 14 கத்திக் குத்துக் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருந்த 17 வயது யுவதி பியசிலி மேற்கண்டவாறு பொலிசாரின் முறைப்பாட்டில் தெரிவித்தார். பொலிசாரின் புகாரில் தொடர்ந்து கூறியதாவது:-

''நான் சாவகச்சேரி கோயில் குடியிருப்புப் பகுதியில் ஒரு வீட்டில் வசிக்கிறேன். வவுனியாவில் உள்ள என் அண்ணாவுக்கு வருத்தம் கடுமை என்றும்' அதனால் உன்னைக் கூட்டி வரும்படி என் முதலாளியிடம் சொல்லி லீவு வாங்கித்தந்து என்னை இங்கு அனுப்பினர் என்று சந்தேக நபர் கூறினர்.

அதன் பின் அறையில் சென்று சீப்பை எடுத்து தலையைச் சீவினேன். திடீரென எதிரி உள்ளே வந்து கதவை அடித்துச் சாத்திவிட்டு, கத்தியால் குத்தினர்.''

## 'மாணவர்வேலைநிறுத்தத்தில் ஈடுபடக்கூடாது''

### தமிழக முதல்வர் கூறுகிறார்

சென்னை, ஆக. 31

''கல்வி கற்பதிலேயே மாணவர்கள் தங்கள் நேரத்தைச் செலவுசெய்யவேண்டும். வேலைநிறுத்தம்போன்றவற்றில் ஈடுபட்டு தமது காலத்தை மண்ணாக்கக் கூடாது' என்று தமிழக முதலமைச்சர் கூறினர்.

அண்ணாத்துரை கல்லூரிக்கான அடிக்கல்லை நாட்டி வைத்துப் பேசுகையிலேயே அவர் இன்று காலை இவ்வாறு கூறினர்.

தமிழ்நாட்டில் 137 கல்லூரிகள் இருக்கின்றன வென்று கூறிய அவர், கல்வி வசதிக்காக மாணவருக்கு 4 கோடி 20 லட்சத்தை தமிழக அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறதென்று கூறினர்.

தமிழக கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் பேசுகையில் வேலைநிறுத்தம் போன்றவற்றில் மாணவர் ஈடுபடுவதைநிறுத்திக்கொள்ளவேண்டுமென்று கூறினர்.

கடமை நேரங்கள் அடிக்கடி மாறுகின்றன. இந்தக் கஷ்டங்களால் கிராமசே[illegible] சிங்களம் படிக்கமுடியாது. தேர்ச்சி பெறுவிட்டால் பதவி ஊர்ஜிதம், சம்பள உயர்வு ஆகியவையும் வழங்கப்படுவதில்லை. எனவே

ரணை செய்யப்பட்டது,

இவ் வழக்கில் சங்கானை கிழக்கில் 1963ம் ஆண்டு மே மாதம் 10ம் தேதி கந்தையா மகாலிங்கம் என்ற வாலிபரை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ய முயற்சித்ததாக ஆறுமுகம் தேவ

யன்று கலைக்கப்பட்டது. உள்ளூராட்சி அமைச்சர் இம் மாநகரசபை கலைக்கப் பட வேண்டுமென்ற அறிவித்தலை விசேஷ அரசாங்க வர்த்தமானிமூலம் வெளியிட்டார்.

## 4 வருடத்தில் 164 தடவை வெளியூர் பயணம்

கொழும்பு, திங்கள்

எயர்சிலோன் கூட்டுத்தாபனத் தலைவர் 4 வருடங்களில்164தரம்வெளியூருக்குசென்றுள்ளதாகவும், இதனால் அரசாங்கத்துக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா இன்று ஆட்சிமன்றத்தில் குற்றம் சுமத்தினர்.

தனது மனைவி மக்களுடன்மாத்திரம் அவர் செல்லவில்லையென்றும். வேறு பலரையும் அழைத்துச் சென்றுள்ளதாகவும் அவர் கூறினர். ஒரு தடவைக்கு குறைந்தது சுமார் 3000 ரூபா வீதம் 164 தடவைகளிலும் அரசாங்கம் நஷ்டம் அடைந்துள்ளதென்றும் அவர் சொன்னர்.

## சுன்னுகம் மயான கொலைவழக்கு

# 'பொய்ச்சாட்சியம் கொடுக்க முயலவேண்டாம்'

## - நீதிபதி எச்சரிக்கை

மல்லாகம், ஞாயிறு

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கேள்வி கேட்பதற்கு முன்னர் நீர் பதில் கூற எத்தனிக்கின்றீர். சாட்சியத்தை முன்னரே ஆயத்தம்செய்ததாக நம்புகின்றேன். பொய்ச்சாட்சியம் கொடுக்க முயலவேண்டாம்''

இவ்வாறு மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி சுன்னுகம் மயானக்கொலைவழக்கு விசாரணையின்போது சாட்சியமளித்த இணுவிலைச் சேர்ந்த கந்தையா சின்னத்துரை என்பவரை எச்சரிக்கை செய்தார்.

முதலாம் எதிரி மயானத்தில் காலஞ்சென்றவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்ட தினத்துக்கு 3 நாட்களுக்கு முன்னர் இறந்தவருடன் தனது தேனீர்க் கடைக்கு வரவில்லை என்றும், முதலாம் எதிரி ஒரு மாதகாலமாக தமது தேனீர் கடைக்கு வந்துபோனதாகவும், ஆனல் எதிரியின் பெயரையோ வசிக்கும் இடத்தையோ தமக்குத் தெரியாதென்றும் சாட்சி கூறினர்.

பொலிசாருக்கு அளித்த வாக்குமூலத்துக்கும் இங்கு நீதிமன்றத்தில் அளிக்கும் வாக்குமூலத்துக்கும் முரண்பாடு இருப்பதாக ஒரு கட்டத்தில் நீதிபதி சாட்சியைப் பார்த்து எச்சரித்தார்.

மல்லாகம் நீதிமன்றத்தில் தொடர்ந்து இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஏற்கனவே சாட்சியமளித்த கே. தம்பையா என்ற சாட்சி எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணைசெய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணையில் சாட்சி கூறியதாவது:

1-ம் எதிரியும் சாட்சி தர்மலிங்கமும் கடந்தஜூலை மாதம் 4-ம் திகதி மான் முதல்தடவையாக எனது கடைக்கு ஒன்றாக வந்தனர். அப்போது தேனீர் பலகாரம் அருந்திவிட்டுச் சென்று இருவரும் மறுநாள் காலையும் கடைக்கு வந்தனர். இதற்கு முன் முதலாம் எதிரியை எனக்கு தெரியாது. இவர் எனக்கு சினேகிதமுமில்லை. அன்றைய தினம்

1-ம் எதிரி கடை குசினிக்கு அருகில் இருந்த மேசையில் இருந்து சாட்சி தர்மலிங்கம் பார்த்துக் கொண்டு நிற்க கடிதம் எழுதினர் பின் அக்கடிதத்தை கிழித்து அடுப்பில் போட்டு எரித்தார். பின் தர்மலிங்கம் மூலம் கடதாசி வாங்கி திரும்பவுர் ஒரு கடிதம் வரைந்து தர்மலிங்கத்திடம் தபால்பெட்டியில் சேர்க்குமாறு கொடுத்தார். 1-ம் எதிரியும் தர்மலிங்கமும் கடைக்கு வந்தபோது எதுவித பொருட்களையும் கொண்டுவரவில்லை.

கே. சின்னத்துரை, ஏ செல்வரத்தினம் பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ரவீந்திரராஜா, கென்றி, ஜெருட்றிக்கோ ஆகியோரும் சாட்சியமளித்த பின் எதிரிகளை தொடர்ந்து றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு நீதிபதி வழக்கு மேல் விசாரணையை இம்மாதம் 14-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் ஆர். ஈ. தம்பிரத்தினம் புறக்டர்கள் ஆர். ஜே. செல்வரத்தினம், வீ. செல்லத்துரை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். பொலிஸ் தரப்பில் உதவி பொலிஸ் சுப்பிரீண்டெண்ட் சில்வா வழக்கை நடாத்தினர்.

மண்டைதீவு வாசியான கே. சிறீகாந்தன் என்பவரைக் கொலை செய்ததாக ரி. கிருஷ்ணன், என். தங்கராசா ஆகிய இருவர் மீது இவ்வழக்கில் சுன்னுகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## நாடு சுபீட்சமடைய

# மக்களுக்கு சமசந்தர்ப்பம் கிடைக்க வேண்டும்'

மல்லாகம், சனி

''மக்களுக்கு சமசந்தர்ப்பம் கிடைத்தால் மக்கள் வாழ்வு சுபீட்சமடையும்'' இவ்வாறு மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வ. பொன்னம்பலம் மல்லாகம் கோட்டடி சன்மார்க்க சனசமூக நிலைய 10-வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பேசும்போது குறிப்பிட்டார். திரு செல்லத்துரை விழாவுக்கு தலைமைவகித்தார்

திரு. பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது: ஒரு நாடு மனிதனின் உடம்பைப்போன்றது இரத்தோட்டம் சமமாக இல்லாத நேரம் சில உறுப்புகள் பாதிக்கப்பட்டு பாரிசவாதம் ஏற்படுகிறது தேசிய செல்வம்நாட்டின் சகல சமூகப் பிரிவுகளிடையே சென்றடைய தவறும்போது வாழ்வு சிதைந்த சமூகப் பிரிவுகள் காணப்படுகின்றது விவசாயிகளும், உழைத்து வாழ்பவர்களும் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாகும் தேசிய வருமானம் சமமாக பங்கிடப்படும்போது அனைவரின் மேம்பாடும் உறுதிப்படுத்தப்படுகின்றது வாழ்வு இழந்த மக்களை வாழ்விக்க நல்ல மார்க்கம் ஒன்று இருந்தால் தேசிய செல்வத்தை அதிகரிக்கச்செய்வதுடன் பகிர்ந்தளிக்கவும் முடியும்.

வேறு பலரும் விழாவில் பேசியதையடுத்து கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. பிரதம விருந்தினர் கூட்ட ஆரம்பத்தில் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

## கிளைகள் நிறுவப்படும்

மண்டைதீவு, ஞாயிறு

தமிழர் சுயாட்சிக் கழகத்தின் கிளை அமைப்புக் கூட்டம் வரும் 2-ம் திகதி மாலை மண்டைதீவு கி. ச. கட்டிடத்தில் நடைபெறவிருக்கின்றது. இதை அடுத்து வல்வெட்டித்துறை கோப்பாய், காரைநகர், திருகோணமலை, புங்குடுதீவு அல்லைப்பிட்டி, யாழ்ப்பாணம், ஆகிய இடங்களிலும் இன்னும் பல இடங்களிலும் கிளைகள் ஆரம்பிப்பதற்கான திகதிகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.

## இந்தியா சென்று கற்க

# இரண்டு மாணவர்களுக்கு உபகார நிதி வழங்கப்படும்

யாழ்ப்பாணம், திங்கள்

பிராமண குலத்தைச் சேர்ந்த அல்லது சைவ மரபில் உள்ள இரண்டு பிள்ளைகளை இந்தியாவிற்கு அனுப்பி கோவில் பூஜை முறைகள் தமிழ், சைவ, சிந்தாந்தம், தத்துவ ஆராய்ச்சி, இலக்கணம் முதலியவற்றைப் பயிற்றுவிக்க பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் முடிவுசெய்துள்ளது.

இவர்கள் மூன்றுவருடங்கள் இந்தியாவில்தங்கி சமஸ்கிருதத்திலும், தமிழிலும் பூசைசெய்யும் முறைகளை நன்கு கற்றறிவார்கள், பயிற்சிக்குப்பின் பேராதனைப் பல்கலைக்கழக முருகன்கோவிலில் இவர்கள் கடமையாற்றுவார்கள்.

இந்த உபகாரச் சம்பளத்தில் இந்தியாவில் கற்பதற்காக 20 வயதிற்குட்பட்ட இளைஞர்களிடமிருந்து இப்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன, (கா-நி)

# மண்டையில் காயத்துடன் வயோதிபத்தந்தை மரணம்

## மகனை பொலிஸார் தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், திங்கள்

தந்தைக்கும் மகனுக்குமிடையில் ஏற்பட்ட சண்டையில் மகன் தந்தையை நிலத்தில் தள்ளி வீழ்த்தினராம் இதனுல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட தந்தை அங்கு மரணமானர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணத்திலுள்ள கரையூர் பொலிஸ் பகுதியில் நடைபெற்றது அந்தோனிப்பிள்ளை என்ற 63 வயது வயோதிபரே இவ்வாறு மரணமானவராவார்,

இம் மாதம் 25-ம் திகதி இச்சம்பவம் நடைபெற்றதாகவும்மண்டையில் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அந்தோனிப்பிள்ளை 30-ம் திகதி மரணமானதாகவும் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் ஜனுப் மொகமட் ஜமீல் நடத்திய மரணவிசாரணையில் தெரியவந்தது.

மரணமானவரின் மற்றொரு மகனுன செபஸ்தியாம்பிள்ளை, மருமகனுன இரத்தினசிங்கம் ஆகியோரும் சாட்சியமளித்த பின்னர் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டது. மரணமானவரை தள்ளி வீழ்த்தியதாகக் கூறப்படும் அவரது மகனுன டோனுஸ் என்பவரை கரையூர் பொலிசார் தேடி வருகின்றனர்.

(கா. நி)

## இன்று அடையாள வேலைநிறுத்தம்

கொழும்பு, திங்கள்

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் கொழும்பு, காலி, திருக்கோணமலை ஆகிய துறைமுகங்களில் இன்று அடையாள வேலை நிறுத்தம் செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது. சம்பள விகிதத்தை அதிகரிக்கும்படி கோருவதற்கு ஆதரவு திரட்டும் நோக்கமாக இது நடைபெறுகிறது.

## நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

உடுவில்தொகுதியைச்சேர்ந்த குப்பிழான் உப தபால் கந்தோர் அதிபராக இலங்கை பல்கலைக்கழக பட்டதாரியான திருமதி கமலாதேவி நடன சிகாமணி நியமனம் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

சேட் தைப்பதில் அனுபவமும் திறமையுமுள்ள பெண்கள் தேவை. தகுந்த நற்சாட்சிப் பத்திரத்துடன் 2-9-69 செவ்வாய்க்கிழமை "தயா தொழிலகம்" சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம் என்னும் முகவரிக்கு நேரில் வரவும். 1360

யாழ்ப்பாணம் கந்தர் மடப்பகுதியில் அல்லது நல்லூர்ப் பகுதியில் வீடுவளவு விலைக்குத் தேவை. புதிதான வீடு விரும்பத்தக்கது. அல்லது இப்பகுதியில் 4 பரப்பு குடியிருக்கும் காணி தேவை. முழுவிபரங்களுடன் தொடர்புகொள்க. விளம்பர இல. 1079, 'ஈழநாடு', மே/பா., யாழ்ப்பாணம். 1079

### கல்வி

பலாலி கனிஷ்ட பல்கலைக் கழக விரிவுரையாளரால் இன்று (1-9-69) முதல்மாலையில் G. C. E. ஆங்கில வகுப்பு இலக்கண முறைப்படி கற்பிக்கப்படும். ஸ்ரீ விக்னேஸ்வரா வித்யாலயம், நம். 1. பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். 1363

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் 234/6 மானிப்பாய் வீதியில் புதிய வீடு உடனடியாக வாடகைக்கு விடப்படவிருக்கிறது. வாடகை ரூபா 60/- மாதம். விபரங்களுக்கு: எம். வரதராசா, 234/6 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1362

## பெண்கள் சிரமதானம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை புனித அன்னம்மாள் ஆலயசிர்திருத்தவேலைகளில் பெண்கள் பங்குபற்றி வருகின்றனர். இரண்டு மூன்று மாதமாக இவ் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இளைஞரும் இவ்வேலைகளில் பங்கு பற்றினர்.

## கேள்வி விளம்பரம்

### கருநாவல்பற்றுதெற்கு கிராமச்சபை

கிராமசபை காரியாலய மதில் வேலை, அம்பகாமம் புதுக்குடியேற்ற ரோட்டு முதலிய வேலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்பத்திரங்களை அக்கிராசனரிடமிருந்து 11-9-69-க்குமுன் முதலாவது வேலைக்குப் பத்திரப்பணமாக ரூபா 10/-ம், கேள்விப் பிணைப் பணமாக ரூபா 50/-ம், இரண்டாவது வேலைக்குப் பத்திரப்பணமாக ரூபா 10/-ம், கேள்விப் பிணைப்பணமாக ரூபா 70/-ம் செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம். (பத்திரப்பணங்கள் திருப்பிக் கொடுபடமாட்டாது) விண்ணப்பங்கள் யாவும் அக்கிராசனருக்கு 12-9-69 காலை 10 மணிக்குமுன் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். இதே நேரத்தில் விண்ணப்பங்கள் வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பிவைக்கப்படவேண்டும். விபரங்கள் யாவும் கிராம சபை அலுவலகத்திலும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வே. கந்தசாமி, ஜே. பி.
கிராமசபை அக்கிராசனர்
ஒலுமடு, மாங்குளம்.
1728

## ஆண்டுவிழா

பண்டத்தரிப்பு, ஞாயிறு

சிறுவிளான் ஞானோதய சனசமூகநிலையத்தின் ஆண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. "மணப்பெண்" என்றநாடகமும், அடங்காப்பிடாரி என்றநாடகமும் இடம்பெற்றன.


59-வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபிராணி நடித்த

குழந்தைக்காக
கதை-வசனம்: துறையூர் மூர்த்தி
குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை பத்திரமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!


இன்று ஆரம்பமாகும்

## உதைபந்தாட்ட நொக்கவுட் போட்டி

யாழ்ப்பாணம், திங்.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தால், யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே 'மன்னவராயன்' வெற்றிக் கிண்ணத்திற்காக நடாத்தப்படவிருந்த 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டி இன்று கோட்டை மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இன்று ஆரம்பமாகும் போட்டியில், இம்முறை நடைபெற்ற சுற்றுப் போட்டியில் சாம்பியனாக வந்த பாஷையூர் 'சென். அன்ரனீஸ்' கழகமும் - தெல்லிப்பளை 'கிறஸ்கொப்பர்ஸ்' கழகமும் மோதிக்கொள்ளும்.

நாளையப் போட்டியில் நாவாந்துறை 'சென். மேரிஸ்' கழகமும் - மயிலிட்டி 'புளு ஸ்ரார்' கழகமும் மோதிக்கொள்ளும்.

3-ம் திகதி யாழ் விளையாட்டரங்கில் நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' கழகமும் - 'கு. நகர் யுனைட்டட்' கழகமும் மோதிக்கொள்ளும் கோட்டை மைதானத்தில் நடைபெறும் போட்டியில் 'வைக்கிங்ஸ்' கழகமும் - 'புனிதவளன்' கழகமும் மோதிக்கொள்ளும்.

(தே. நி)

## "விளையாட்டு அரங்குகள் உயர்ந்த கல்லூரிகள்"

மல்லாகம், ஞாயிறு

'விளையாட்டு அரங்குகள் மிக உயர்ந்த கல்லூரிகள் படித்தவர் மாத்திரம் தொடர்ந்து படிக்கும் இடம் கல்லூரி. படிப்பாளர் மட்டுமின்றி பாமர மக்களும் விளையாட்டுக்களில் ஈடுபடுவதால் சக வாழ்வு, சகிப்புத் தன்மை, பிறர் திறனை மதிக்கும் பண்பு போன்ற நற் பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்'

மல்லாகம் கிராம சபைத் தலைவர் திரு. வ பொன்னம்பலம் ஆனைக்கோட்டை யங்ஸ்ராஸ் விளையாட்டுக் கழகத்தின் 9-வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு பேசும் போது மேற்கண்டவாறு கூறினார் திரு. எம். சபாம்பிள்ளை தலைமையில் பிடாரி கோவில் மைதானத்தில் இவ்விழா நடைபெற்றது பிரதம விருந்தினராக உதவி பொலிஸ் சுப்ரீன்டெ...

# முன்னாள் யாழ். மேயர்கள் பற்றி மாநகரசபையில் வர்ணனை

யாழ்ப்பாணம், திங்கள்

"யாழ்ப்பாண நகருக்கு அழகூட்டும் சிறப்பான வீதிகளையும், ஸ்ரேடியம் மைதானத்தையும் திரு. அல்பிரட் துரையப்பா மேயராக இருக்கும்போதுசெய்து தந்தார். திரு. டி. எஸ். துரைராசா மேயராக இருக்கும்போது அழகான திறந்தவெளியரங்கை அமைத்துத் தந்தார். திரு. சாம்சபாபதி மேயராக விருக்கும்போது பொதுஜன நூல்நிலையம் அமைக்கப்பட்டது. நல்லதொரு நகர மண்டபத்தை அமைத்துத் தந்த தற்போதைய மேயர் திரு எஸ். நாகராசா யாழ் நகரின் எழிலுக்கு மீளத் திட்டமிட்டு இதற்குபுதுவடிவம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும்."

இவ்வாறு யாழ் நகரின் கடந்தகாலமேயர்கள் பற்றியும், அவர்கள் செய்த சேவைகள்பற்றியும் மாநகர சபையின் 23-ம் வட்டார அங்கத்தவரான திரு. சிவசுப்பிரமணியம் இம்மாதம் 28-ம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நீண்டநேரம் சொற்பொழிவு நடத்தினார்.

பின்வரும் பிரேரணையை இவர் சபையில் பிரேரித்து அதைத்தொடர்ந்து இவர் பேசியதாவது:

தற்போது ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட சனத்தொகையுடன் கூடியதும், இந்த நூற்றாண்டின் முடிவில் இரண்டரை லட்சம் அடையும் என சாத்தியப்படுவதும் இந்நாட்டின் இரண்டாவது பெரியநகரமுமான வடபகுதியின் தலைநகரான யாழ். நகரமே இலங்கையின் பெரிய நகரங்களுள் இதுவரை திட்டமிடப்படாததும், வலயங்களாகப் பிரிக்கப்படாததும், முறையாக எல்லைகள் நிர்ணயிக்கப்படாததுமாகும்.

எனவே யாழ்ப்பாண மேயர், அரசாங்க நாடு நகர நிர்மாணரையும், தமக்குக் கீழ்கடமையாற்றும் பல்வேறு தலைவர்களையும் கலந்தாலோசித்து நகரின் எதிர்கால எழிலுக்கு மீளத்திட்டமிட்டு. நகருக்கு புது வடிவம் கொடுக்க உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

கைதடி, நாவற்குழிப் பகுதிகளையும் புதிதாகயாழ். நகருடன் சேர்த்து, கொழும்புடன் இரத்மலானையை இணைத்திருப்பது போன்று, இதனையும் அமைக்க மானகர உப விதிகளையும் மாற்ற வேண்டும் என்றும், அரசியல் வாதிகள் எப்போதும் தேர்தலைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், நகரின் எதிர்காலம் பற்றியே அவர்கள் சிந்திப்பதில்லையென்றும் திரு வி. சிவசுப்பிரமணியம் சொன்னார்.

இப் பிரேரணை சம்பந்தமாக மேயர் திரு. எஸ். நாகராஜா பேசுகையில் வியாபார நிறுவனங்களிலும், வர்த்தகர்கள் தொல்லையாலும், அமைதியான வாழ்வுக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் யாழ் நகரை ஒரு மாநகரம் என்று சொல்லவேமுடியாமலிருப்பதாகவும், இப் பிரேரணை சம்பந்தமான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும் என்றும் சொன்னார்.

பிரேரணை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு பரிசிலனைக்காக நிதிக்குழுவுக்கும், சுகாதாரக் குழுவுக்கும் அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பெரிய கடையில்இருக்கும் இறைச்சிக்கடைகருவாட்டுக் கடை, கோழிக்கடைகள் ஆகியன வருடாவருடம் கேள்வி மூலம் கொடுப்பதால் சில வேளை வருடத்துக்கு ஒருவர் வியாபாரம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது...

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 1—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர் [illegible] 1-00 கதம்ப இசை 1-30 செய்திச் சுருக்...

## புதியபதவி

உடுவில், ஞாயிறு

தபால் இலாகாவில் பலகாலமாக கடமை யாற்றி வந்த திரு. சின்னையா தியாகராசாவிற்கு அண்மையில் புதிய பதவிகிடைத்துள்ளது.

திரு. எஸ். தியாகராசா சமீபத்தில் நடைபெற்ற தபாற்கந்தோர் கணக்கு பரிசோதகர் தேர்வுப் பரீட்சையில் முதலாவதாகசித்தியடைந்ததைத்தொடர்ந்து அரசாங்க பொது சேவைக் கமிஷனால் இவர் தபாற்கந்தோர் பரிசோதகராக புதிய நியமனம் பெற்றுள்ளார்

இவர் பெரியதபாற்கந்தோர், தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி முதலிய பகுதிகளில் நீண்டகாலம் கடமையாற்றியுள்ளார். சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் பழைய மாணவரான இவர் கந்தரோடை காலம் சென்ற திரு. சின்னையாவின் புதல்வராவார்.

## வெங்காய திருட்டு

மட்டுவில், சனி

மட்டுவில் பகுதியில்வெங்காயத் திருட்டு அதிகரித்துள்ளது இதனால் தொகையான வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் இரவுபகல் விழிப்புடன் இருக்கும் நிலை உருவாகியுள்ளது,

இப்பகுதிச் சங்கங்களும் புகையிரதப்பெட்டி இல்லாமையினால் வெங்காயக் கொள்வனவை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளன. இதைத் தொடர்ந்து பெருந்தொகையான வெங்காயம் அறுவடை செய்த விவசாயிகள் தாம் அறுவடைசெய்த வெங்காயத்தை தமது வீடுகளிலேயே பௌத்திரப்படுத்த வேண்டியிருக்கின்றது இந்த நிலையை சாதகமாகக் கொண்ட திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகிறார்கள். இதனால் இங்கு பாதிக்கப்பட்டவர் வல்லிபுரம் மயில்வாகனமாகும்; இவருக்கு சிறு தொகை வெங்காயம் திருட்டுப்போயுள்ளது,

## சாட்சிக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

"முன்னுக்குப் பின் முரணாகச் சாட்சியம் சொன்னால் என்ன நடக்கும் என்பது உனக்குத் தெரியாது அதற்கான தண்டனை என்ன என்பது உனக்குச் சீக்கிரம் தெரியவரும்"

சங்கானை கொலை முயற்சி வழக்கின் சாட்சியான சுந்தையா மகாலிங்கத்தைப் பார்த்து நீதியரசர் திரு ஏ. சி அலெஸ் இவ்வாறு தெரிவித்தார்.

பொலிஸாருக்குக் கொடுத்த வாக்குமூலத்துக்கு மாறாகவும், முன்னுக்கு பின் முரணாகவும் சாட்சியமளித்ததைக் கண்டித்த நீதியரசர் இப்படியான பொய்ச் சாட்சியங்களுக்கு எப்படியான தண்டனை கிடைக்கும் என்பது விரைவில் உனக்குத் தெரியும என்றும் சொன்னார். முதலில் ஒரு விளக்கு வெளிச்சத்தில் எதிரியைக் கண்டதாகக கூறி, பின்னர் இரண்டு வெளிச்சத்தில் கண்டதாகச் சொன்னதையும் நீதியரசர் இங்கு சுட்டிக் காட்டினார். (கா. நி)

## யோகபுரம் காந்திகிராமம்

அளவெட்டி, ஞாயிறு

வலிவடக்குப் பகுதியில சேந்தாங்குளம் யோகபுரம் காந்தி கிராமமாக அமைக்கப்பட்டுவருகிறது.

யாழ். மாவட்டத்தில் காந்தி கிராமம் அமைக்கும் வேலையில் காந்திநூற்றாண்டு யாழ். மாவட்டக்குழு தற்போது ஈடுபட்டுள்ளது.

இதன்படி வலிவடக்கு காரியாதிகாரி பிரிவில் சேந்தான்குளத்தை அடுத்த யோகபுரம் தெரிவாகி தற்போது காந்தி கிராமமாக அமைக்கப்பட்டுவருகிறது

இதற்கான நடவடிக்கைகளை வலிவடக்கு காரியாதிகாரி திரு. பி. எல் பற்றிக்ஸ், கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. ஆர். பரராசசிங்கம் ஆகியோர் செய்து வருகின்றனர்.

## 'பழம் பெருமை உதவாது செயல்தான் தேவை'

பருத்தித்துறை, ஞாயிறு

'தமிழர்கள் தங்கள் பழம் பெருமைப் பேச்சுக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு உலகின் பல நாடுகளுக்கும் சென்று அங்குள்ள கலைச்செல்வங்களைக் கொண்டுவந்து நமது நாட்டிற் குவிக்கவேண்டும். இமயத்திற் கொடிபொறித்த தமிழனின் அறிவு இமயமளவுக்கு வளரவேண்டும். அதற்கு ஆங்கில மொழியறிவு மிகமிக அவசியமென்பதை மாணவர்நன்கு உணரவேண்டும்.'

இவ்வாறு இங்கிலாந்துக்கு பொறியியல் உயர் கல்வி காரணமாகச் செல்லும் திரு எஸ். நடராசாவுக்குவதிரி திருஇருதயக்கல் கல்லூரி மண்டபத்தில் நடந்த பிரியாவிடை வைபவத்திற்குத் தலைமை தாங்கிய பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு வி. எஸ். கந்தப்பு கூறினார். தொடர்ந்து பேசிய அவர் தமிழரின்எதிர்காலம் இருள் சூழ்ந்திருப்பதால் பிறநாடுகளுக்கு எமது இளைஞர் சென்று பொருள் தேட வேண்டுமென்றும் தமிழ்ப் பிரதேசங்களின் வளத்திற்குத் தமது அறிவைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கூறினார்.

திரு அன்ரனி இராசையா உடல்பயிற்சிப் போதனாசிரியர் திரு. வி. கார்த்திகேசு ஆகியோரும் பேசினர், திரு எஸ். தியாகலிங்கம் நன்றி கூறினார். ......

## ஆரம்பிக்கவில்லை

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் தபால் நிலையக் கட்டிடம், ஊழியர்களின் வேலை வசதிக் கேற்பவும், பொதுமக்களின் வசதிக்கமையவும், சுகாதாரவசதிகளுடன் கூடியதான முறையில்திருத்தியமைக்கவேண்டியுள்ளது. இந் நிலையத்தை நவீன முறையில் அமைப்பதற்கு அரசாங்கம் காணியை விலைக்குப் பெற்றிருந்தும் இன்னும் எதுவித ஆரம்ப வேலைகளும் நடைபெறாதது குறிப்பிடத்தக்கது.

அது நல்லத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை ... வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி — ஜெயலலிதா
சௌகார் ஜானகி
நடித்த
**எங்க ஊர் ராஜா**

யாழ் வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம் ராஜன், புஷ்பலதா, சிவகுமார்,
கீதாஞ்சலி, நாகேஷ், அஞ்சலிதேவி
நடித்த
**பால்குடம்**
அத்துடன் விண்வெளிக்கலம் அப்பல்லோ - 10 ன் பயணக் காட்சியும், சந்திரனில் முதல் மனிதன் இறங்கி நடந்த அப்பல்லோ-11 காட்சியும் காண்பிக்கப்படுகின்றது

யாழ்நகர் வெலிங்டன்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயா தினங்களில்
காலை 10-30 மணிக்கு மெட்னி
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
எல். விஜயலக்ஷ்மி ★ ஏ. கருணாநிதி
பாலமுரளி கிருஷ்ணா ★ கீதாஞ்சலி
வாணிஸ்ரீ ★ ஜெயந்தி ★ நிர்மலா
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்
பக்த **பிரகலாதா**
(ஈஸ்ட்மென் கலர்)

வாறு கூறினார் திரு. எம். சபாம்பிள்ளை தலைமையில் பிடாரி கோவில் மைதானத்தில் இவ்விழா நடைபெற்றது பிரதம விருந்தினராக உதவி பொலிஸ் சுப்ரீன்டென்ற் திரு. எஸ். ஐ. அசீஸ் கலந்து கொண்டார்.

——

## தாக்கப்பட்டதாக புகார்

தெல்லிப்பழை, ஞாயிறு கட்டுவன் தெற்கு பாரதி சன சமூக நிலையத்தில் சென்ற வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் பத்திரிகைகள் வாசித்துக் கொண்டிருந்த வர்களை, சுன்னாகம் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் எதுவித காரணமுமின்றி சில பொலிஸ் கான்ஸ்டபிள்களுடன் வந்து தாக்கியதாக வடபகுதி பொலிஸ் அதிபர், வலிவடக்கு காரியாதிகாரி, மயிலிட்டி கி. ச. தலைவர், உடுவில் எம். பி., உள்ளூராட்சி உதவி ஆணையாளர், காங்கேசன்துறை எம். பி., பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கிளிநொச்சி எம். பி., ஆகியோருக்கு மேற்படி சன சமூக நிலையத்தினர் புகார் தெரிவித்துள்ளனர்.

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
கே. ஆர். ராமசாமி - சாவித்திரி
நடித்த
**செல்லப்பிள்ளை**

வல்வெட்டித்துறை
**ரஞ்சனா தியேட்டர்**
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா காலை 10-30
எம். ஜி. ஆர். - பானுமதி
நடித்த
**காஞ்சித் தலைவன்**

**REGAL** JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
John Mills, Michael Caine
in
THE WRONG BOX

**MANOHARA**
JAFFNA
Daily 6-30., & 10-00 p.m
Poya, Pre-Poya 4 Shows
Anula Karunathilaka
Vikramapokadai
in
GOLUHADAWATHA
(The best love story in Sinhalese)

344 மீ அன் 49 மீ
பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்பஇசை 1-30 செய்திச் சுருக்கம்.

344 மீ அன் 61 மீ
மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி, 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 வாத்தியஇசை 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்நாடக இசை, 7-35 முத்திநெறி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 கதாப்பிரசங்கம், 10-30 செய்திச்சுருக்கம்.

..., கோழிக்கடைகள் ஆகியன வருடாவருடம் கேள்வி மூலம் கொடுப்பதால் சில நேரம் வருடத்துக்கு ஒருவர் வியாபாரம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனால் ஒரு வியாபாரி வருஷம் முழுவதும் கொடுத்த கடனை அறவிட ஏலாமல் இருப்பதோடு வியாபாரத்துக்கு மிகவும் இடைஞ்சல் கொடுப்பதாலும், கேள்வி முறையை ரத்துச்செய்து வேண்டுமாயிருந்தால் மாச வாடகையைக் கூட்டி வசதி செய்து கொடுக்கலாமென திரு. கே. வி. தெய்வேந்திரம் கொண்டுவந்த பிரேரணையும் நிதிக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப் பட்டது.

(கா. நி)

# இன்றைய பலன்

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை
ஆவணி மாதம் 16-ந் திகதி (1-9-69)

**மேஷம்**- வெளியிடத்தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம். திடீர் பிரயாணத்துக்கும் இடமுண்டு. உடல் நலம் பாதிக்கப்படக்கூடும். சுகாதாரம் வேண்டும்.

**ரிஷபம்**- கனிவான நினைவுகள் தலைதூக்கும். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. இனிதான பேச்சின்மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள். தனச்சிறப்புக்கும் இடமேற்படும் சுபதினம்.

**மிதுனம்**- ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்கநேரிடும். மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படக்கூடும். அயலவர்களுடன் அன்பாக நடந்து கொள்ளவும். நிதானம் நன்று.

**கடகம்**- பொறியியலாளர்களுக்கு இன்று பொன்னான தினம். பூமி விவகாரத்தில் இன்று நல்ல முடிவு ஏற்படும். செலவுக்குவேண்டிய பணமும் கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் வாகன சுகமும் உண்டு.

**சிம்மம்**- உளளம் உவகையால் துள்ளும். உறவுமுறைகளில் இறுக்கமேற்படும். புதியவர் ஒருவரின் தொடர்பு உங்களுக்குப் புதுப்பாதையைக்காட்டும். அறவழியில்நாட்டத்துக்கும் இடமுண்டு.

**கன்னி**- எதிர்பாராதவகையில் பொருள் விரயமாகும். வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றிமறையும். சிந்தையில் குழப்பநிலை ஏற்படும். வீட்டிலும் சிறிது பூசலுக்கு இடமுண்டு. தெய்வநம்பிக்கை நன்று.

**துலாம்**- கவர்ச்சிகரமான தினம் காதலர்கள் இன்பத்தில் மிதப்பர் கரும்புபோல் வாழ்க்கை இனிக்கும். கலைஸ்திரவழியாலும் சுகம் கிடைக்கும். செல்வத்துக்கு மேலும் சிறப்படைவதற்கும் இடமுண்டு.

**விருச்சிகம்**- குடும்பத்தில் குறைகேட்கநேரிடும். மறைமுகமாக நடத்திய காரியமொன்று இன்று அம்பலமாகலாம். சிலருக்கு விரக்தி மனப்பான்மையும் தென்படும். பொறுமையுடன் நடப்பது நன்று.

**தனுசு**- தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வ நம்பிக்கை மேலிடும். ஸ்தலயாத்திரையொன்று மேற்கொள்ளப்படலாம் நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

**மகரம்**- தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுதல்களுக்கு இலக்காவீர்கள். சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணமொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

**கும்பம்**- புதியவழிகள் மூலம் பொருள்வரவுக்கு இடமுண்டு சிலருக்குப் பதவி உயர்வும் கிடைக்கலாம். குடும்பத்தில் இனிமை தவழும் பிள்ளையொன்றின் கல்வியில் அதிககவனம் செலுத்தப்படும். நல்ல நாள்.

**மீனம்**- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கு இடமுண்டு. புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக்கொள்ளவும். பிரயாணத்தைப் பின்போடுவது விரும்பத்தக்கது.

அது நல்லது
அது இதமானது




அதுவே
ஸ்போர்ட்ஸ்மன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிடெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெருசலத்துக்குஐ.நா.காவலர்படை அனுப்பக் கோரிக்கை

## 25 முஸ்லிம் நாடுகள் வற்புறுத்தல்

நியூயோர்க், ஆக. 31

ஜெருசலத்தில் உள்ள புனித தலங்களைப் பாதுகாப்பதற்கு ஐ. நா. பாதுகாப்புப் படையொன்றை அனுப்பி வைக்கும்படி ஐ நா. பாதுகாப்புசபையை 25 முஸ்லிம் நாடுகள் கேட்டிருக்கின்றன

இந்த முஸ்லிம் நாடுகள் தயாரித்துள்ள ஒரு திர்மானத்தில் ஐ. நா. வின் மேற்பார்வையில் இரண்டு கமிஷன்களை நிறுவும்படியும், ஒன்று ஜெருசலத்திலுள்ள அல்அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டது குறித்து ஆராய்வதற்கும், மற்றது அல் அக்ஸா பள்ளிவாசலுக்கு ஏற்பட்ட சேதங்களைக் கணக்கிட்டு செப்பனிட ஏற்பாடு செய்வதற்கும் பணிக்கப்பட வேண்டுமென்றும் இந்த நாடுகள் கோரியிருக்கின்றன

இதற்கிடையில் ஜெருசலம் பள்ளிவாசல் எரிக்கப்பட்ட சம்பவம் குறித்து ஆலோசிக்க அரபுநாடுகளின் சிறிய உச்சிமகாநாடு ஒன்று நடைபெறவிருப்பதாகவும் அறியப்படுகின்றது. ஜோர்டான் மன்னர் ஹுசேன் நேற்று கெய்ரோவில் ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி அப்துல் நாஸரைச் சந்தித்து அக்அக்ஸா பள்ளிவாசல் எரிக்கப்பட்டது குறித்து ஆலோசனைகள் நடத்தினர்.

## இளம் பெண்தான் தலைமைவகித்தார்

நேற்றுமுன் தினம் டெல் அவிவிற்குப் போய்க்கொண்டிருந்த அமெரிக்க விமானத்தைத் துப்பாக்கிமுனையில் சிரியாவுக்குத் திருப்பிக் கொண்டுபோன பாலஸ்தீன கொமாண்டோ அணிக்கு 20 வயதான இளம் பெண்தான் தலைமை வகித்தாராம் 113 பிரயாணிகளுடன் ரோமிலிருந்து இஸ்ரேல் தலைநகரான டெல்அவிவ் நோக்கிப் போய்க்கொண்டிருந்த இந்த விமானம் மத்தியதரைக் கடலுக்குமேல் பறந்துகொண்டிருந்தபோது பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த ஒரு அணியினுல் துப்பாக்கி முனையில் பலவந்தமாக சிரியாவுக்குள் கடத்திச் செல்லப்பட்டு டமாஸ்கஸ்சில் இறக்கப்பட்டது.

இந்த விமானத்திலிருந்த பிரயாணிகளில் பெரும்பாலோர் இப்பொழுது இத்தாலிய விமான மொன்றில் ஏதென்ஸ் வந்துசேர்ந்துள்ளனர் பழுதடைந்த விமானத்தைத் திருத்துவதற்காக அதன் கப்டன் டமாஸ்கஸிலேயே தங்கியிருக்கிறர் விமானத்திலிருந்து கீழேகுதித்துக் காயமடைந்த ஒரு பெண்ணும் அவருடையபிள்ளைகளும் சிகிச்சைபெறுவதற்காக இன்னமும் அங்கேயே தங்கியிருக்கிறர்கள். விமானத்திலிருந்த இஸ்ரேலியர்கள் ஆறுபேரும் சிரியா அதிகாரிகளால் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## இஸ்ரேலியரை விடுவிக்க அமெரிக்கா வற்புறுத்தல்

விமானத்தில் பிரயாணம் செய்தவர்களில் இஸ்ரேலியர்கள் ஆறுபேரையும்சிரியா பிடித்துவைத்திருப்பதை அமெரிக்கா [illegible] கான காரணத்தை சிரியா அறிவிக்கவில்லை.

இஸ்ரேலியர்பிடித்துவைத்துள்ள சிரியா அதிகாரிகளையும், பாலஸ்தீன [illegible]

பள்ளிவாசல் தீ வைப்பு பற்றி

## சோவியத் மக்கள் ஆத்திரம்

### 'டாஸ்' அறிக்கை

மாஸ்கோ, ஆக. 31

மத்திய கிழக்கிலுள்ள அராப் கட்டடக் கலையின் மகத்தான சின்னமும், முஸ்லிம் யாத்திரை போகும் புனித ஸ்தலமும், முஸ்லிம்களின் உன்னதமான தொழுகை ஸ்தலங்களுள் ஒன்றுமான அல் அக்ஸா பள்ளிவாசல் இஸ்ரேல் ஆயுதப் படைகள் அபகரித்துக் கொண்டுள்ள ஜெரூஸலத்தின் அராப் பகுதியில் தீவைக்கப்பட்டது என்ற செய்தியைக் கேட்டு சோவியத் மக்கள் வெஞ்சினம் கொண்டனர்.

இந்தக் கொடுமை மத்திய கிழக்கிலும், ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் நியாயமான ஆத்திரத்தை அலையடித்தெழச் செய்துள்ளது என்று 'டாஸ்' அறிக்கை வெளியிட்டிருக்கின்றது.

இஸ்ரேலிய அரசாங்கமும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை ஆதரித்து நிற்கும் ஏகாதிபத்திய சக்திகளும் இந்த செயலுக்கான பொறுப்பை ஏற்காது தட்டிக் கழிக்க முடியாது. அத்துடன் சமாதான பூர்வமான மக்களை எதிர்த்து ஆக்கிரமிப்புப் படைகள் தொடர்ந்து ஆத்திர மூட்டல்களைச் செய்து வருகின்றது. ஜெரூஸலத்திலும் நப்லஸிலும் மற்றும் அபகரிக்கப்பட்ட நகரங்களிலும் அரபு மக்கள் சமாதான பூர்வமாக தமது எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக நடத்தும் ஆர்ப்பாட்டங்களை நசுக்க இஸ்ரேலிய அதிகாரிகள் துப்பாக்கிகளையும், யந்திரத் துப்பாக்கிப் படையினரையும் அனுப்புகிருர்கள்.

ஏகாதிபத்திய வாதிகளினதும் மேற்கிலுள்ள ஸியோனிஸ சக்திகளினதும் ஆதரவை ஆதாரமாகக் கொள்ளும் இன்றைய இஸ்ரேல் தலைவர்கள் உலகப் பொதுஜன அபிப்பிராயத்தை மதிக்க மறுக்கிருர்கள், ஐ. நா. சாஸனத்தையும் சர்வதேசச் சட்ட கோட்பாடுகளையும் தமது காலடியில்போட்டு மிதிக்கிருர்கள்; மத்திய கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதைச் சீர்குலைக்கமுனைகிருர்கள். அல் அக்ஸா பள்ளிவாசல் தீ வைப்பு அரபு மக்கள் வசிக்கும் முழு கட்டடங்களும் இஸ்ரேலியர்களால் தரைமட்டமாக்கப்படுதல் உட்பட ஜெரூசலத்தின் அபகரிக்கப்பட்ட அரபுப் பகுதிகளில் நடைபெறும் அனைத்துச் சம்பவங்களும் இஸ்ரேல் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் விளைவுகளை ஒழித்துக்கட்டவும், முதலாவதாக 1967 ஜூன் ஆக்கிரமிப்பின்போது கைப்பற்றப்பட்ட அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் துருப்புக்களை வாபஸ்பெறச் செய்யவும் சமாதானத்தை நேசிக்கும் சகல சக்திகளும் தீவிரமாக முயலவேண்டும் என்பதையேஎடுத்துக்காட்டுகின்றன என்று டாஸ் எழுதியுள்ளன.

## இ.போ.ச. பஸ்கள் மோதின

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த ஒரு இ.போ.ச பஸ்வண்டியும் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்வண்டியும் மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கண்மையில் மோதிக்கொண்டதால் இரு பஸ் வண்டிகளும் பலத்த சேதத்துக்குள்ளாயின.

பிரயாணிகள் சொற்ப காயங்களுடன் தப்பினர். சாரதிகளும் காயமின்றித் தப்பினர்.

— —

## கல்வி அமைச்சருக்கு கோரிக்கை

பருத்தித்துறை, ஞாயிறு

அண்மையில் வெளிவந்த க.பொ.த (சாதாரண) பரீட்சைமுடிவுகள் கம்பியூற்றர் இயந்திர மூலம் முடிவு செய்யப்பட்டமையாற் பல தவறுகள் ஏற்பட்டுள்ளன. எனவே இதே பரீட்சையை மீண்டும், தகுந்த முறைப்படி நடத்தவோ அல்லது மீண்டும் இதே பரீட்சை விடைத்தாள்களைப்பரிசீலனை செய்யவோ கல்வி அமைச்சர் பரீட்சைப்பகுதிக்கு உத்தரவிட வேண்டுமென்றும் தீர்மானங்கள் கரவெட்டி வாணி கலைக்கழகத்தினராலும், இணுவில் சனசமூக நிலையத்தினராலும் நிறைவேற்றப்பட்டுக் கல்வியமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

— —

## வினுத்தாள் மாற்றம்

வெள்ளவத்தை, ஞாயிறு

இம்மாதம் 25-ம் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்காளர் பரீட்சையில் வினுப்பத்திரங்களை மாறிக் கொடுத்துப் பெரிய குழப்பம் நடைபெற்றுள்ளது.

காலையில்நடைபெறவேண்டிய கணக்கியல் பாடத்திற்கு பதிலாக நிர்வாகக் குறிப்புகள் பாடத்திற்குரிய வினுத்தாள்கள் கொடுக்கப்பட்டுவிட்டதாம். இத்தகைய குழப்பத்தால் பல அரசாங்க ஊழியர்கள் இதே பரீட்சையைத் திரும்பவும் எடுக்கவேண்டிய அவல நிலைக்கு ஆட்பட்டுள்ளனர் [illegible]

## மொரார்ஜி விஷயத்தை காரியக்கமிட்டி தீர்மானிக்கும்

### நிஜலிங்கப்பா கருத்து

பெங்களூர், ஆக. 31

திரு. மொரார்ஜிதேசாய் சம்பந்தமான விஷயம் குறித்து பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியுடன் முதலில் ஆலோசனைகள் நடத்தப் போவதாகவும் பின்னர் அதனைக் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்குத் தெரிவித்து விஷயத்தை அதன் முடிவுக்கேவிட்டுவிடப்போவதாகவும் காங்கிரஸ் தலைவர் திரு. நிஜலிங்கப்பா தெரிவித்திருக்கிறர்.

இதற்கிடையில் திரு. மொரார்ஜிதேசாயை மீண்டும் மந்திரிசபையில் சேர்த்துக் கொள்வதற்கு திருமதி இந்திரா காந்தி விருப்பம் தெரிவித்திருப்பதாகவும், ஆனல் நிதிஅமைச்சை அவரிடம் திரும்பவும் கொடுப்பதில்தான் அவர் தயக்கம் காட்டுவதாகவும் கருதப்படுகின்றது.

## பிரதமர் பதவியும் கட்சியின் தலைவர் பதவியும்

## 'தோட்ட தொழிலாளர்களின் பரிதாபகரமான நிலை'

கொத்மலை, ஞாயிறு

"தோட்டத்தொழிலாளர்களின் அன்ருட சிறு சிறு பிரச்னைகளை அவ்வப்போது தீர்தது வைத்துக் காலத்தை ஓட்டிக்கொண்டு போவதற்காகவும் அச்சிறு பிரச்னைகளைப் பெரிய விஷயங்களாக்கிச் சந்தாக்கள், நிதிகள் சேகரித்துத் தொழிற்சங்க நடவடிக்கைகள் என்ற பெயரால் பணமும் பதவியும் அந்துஸ்தும் பெற்றுப் பிரபலமாவதற்காகவும் போலித் தொழிற் சங்கத் தலைவர்கள் தொடர்ந்தும் முயற்சித்துக்கொண்டிருக்கிருர்கள். அவர்களது ஆசை வார்த்தைகளால் மேலும் மேலும் ஏமாந்றப்பட்டு முன்னேற்றத்திற்கான மார்க்கத்தில் செல்லாமல் நெடுகிலும் இதுவரை காலமும் போய்க்கொண்டிருக்கும் தவருன பாதையிலேயே தோட்டத் தொழிலாளர்கள் இன்னமும் செல்ல முற்படுவார்களேயானல் அவர்களது அன்ருடப் பிரச்னைகளும்சரி, அடிப்படை ஜீவாதார பிரச்னைகளும்சரி நிரந்தரமாகத் தீர்க்கப்படுவதற்கு வழியே இருக்காது."

இவ்வாறு லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் (இலங்கை சமசமாஜக்கட்சி கட்டுப்பாட்டின் கீழ் இயங்குவது) அமைப்புச் செயலாளா திரு. எஸ். சிவசாமி கொத்மலையைச் சேர்ந்த ராசாத்தோட்டம் அருகாமையில் நடைபெற்ற மேற்படி யூனியனின் பிரச்சாரப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார். கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னல் பேச்சாளர்கள் மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். "இன பேதம் ஒழிக; தொழிலாளர் ஐக்கியம் ஓங்குக. சமதர்மம் வேண்டும்' என்பனபோன்ற கோஷங்கள் ஊர்வலத்தில் ஒலித்தன. சுற்றுவட்டார தோட்டங்களிலிருந்தும் இக்கூட்டத்திற்கு நூற்றுக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களும் கிராமப்புறத்திலிருந்து ஏராளமான சிங்கள விவசாயிகளும் வந்திருந்தார்கள். இக்கூட்டத்தில் யூனியன் பிரமுகர் ஷெல்டன் டி. சில்வா, யூனியன் வவுனியா கிளைப்பிரதிநிதி திரு. எஸ் ஏ. குணசேகரா, திரு. பி. பிச்சமுத்திரையான் ஆகியோர் பேசினுர்கள். திரு. ஏ. ஆர். ஆர் ஆறுமுகம் வரவேற்புரையும் திரு எல். சுப்பையா நன்றியுரையும் கூறி [illegible]

அன்று அவர்கள் சமசமாஜ செங்கொடியின் கீழ் போராடியதே ஆதாரமும் அத்திவாரமுமாகும்.

## ச ச நிலைய வருடாந்த கூட்டம்

அளவெட்டி, ஞாயிறு


மாவை-கொல்லங்கலட்டி சனசமூக நிலையத்தில் வருடாந்தப் பொதுக் கூட்டம் நிலையத்தில் திரு. வ. சரவணமுத்து (ஜே. பி) தலைமையில் நடைபெற்றது.

தலைவராக திரு. சரவணமுத்துவும் உபதலைவர்களாக வ. குமாரசாமிக்குருக்கள், ந ஜீவேஸ்வரா, ஆ. கிருஷ்ணசாமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். காரியதரிசியாக சி. சிவமகராசாவும் உப காரியதரிசியாக நா. போஜனும் பொருளாளராக சி செல்லத்துரையும், உப பொருளாளராக சி. நடராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

பின் வருவோரைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

க. நவரத்தினம், த கனகநாயகம். செ. இலங்கநாயகம், வி. வினுசித்தம்பி, வி செல்லையா, க சிவராசா, சி முருகையா, சு இளமுருகன், ந. திருப்பருங்கிரிநாதன் க. திசைநாயகம்.

## வைத்தியர் சின்னத்துரை



யாழ் நகரை அரசு புரிந்த பழைய தமிழ் மன்னரின் தலைநகராகவும், கலியுக வரதராகிய முருகக் கடவுளின் கொடிஸ் தலமாகவும் விளங்குகின்ற நல்லூரில், ஆலய வீதி மருங்கில், சைவ வேளாளர் குலத்தில் ஆறுமுகம்பிள்ளையின் வைத்தியப் பரம்பரையில் பிறந்தவர் சின்னத்துரைப்பிள்ளை அன்னரது 14-வது சிரார் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கா வற்புறுத்தல்

விமானத்தில் பிரயாணம் செய்தவர்களில் இஸ்ரேலியர்கள் ஆறுபேரையும்சிரியா பிடித்து வைத்திருப்பதை அமெரிக்கா கண்டித்திருக்கிறது. அவர்களை உடனடியாக விடுதலைசெய்யுமாறு அமெரிக்கா வற்புறுத்தியிருக்கின்றது. இஸ்ரேலியர்களைத் தடுத்து வைத்திருப்பதற்கான காரணத்தை சிரியா அறிவிக்கவில்லை.

இஸ்ரேலியர்பிடித்துவைத்துள்ள சிரியா அதிகாரிகளையும், பாலஸ்தீன வீரர்களையும் விடுதலைசெய்வதற்காக இவர்களைப் பிடித்துவைத்திருப்பதாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் கூறியிருக்கின்றது.

## அடுத்தநடவடிக்கை எடுக்குமுன் சிந்திக்கவும்

— கோல்டாமெயர்

விமானத்தில் பிரயாணம் செய்த இஸ்ரேலியர்களைப் பிடித்து வைத்திருக்கும் சிரியா அடுத்த நடவடிக்கை எடுக்குமுன் ஒருதரம் சிந்திக்கவேண்டும் என்று இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டாமெயர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

அமெரிக்க விமானத்தில் பிரயாணம் செய்த இஸ்ரேலியர்கள் சிரியாவில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து இஸ்ரேலிய மந்திரிசபை ஆராய்ந்ததாகத்தெரிகின்றது. இந்தச் சம்பவம் குறித்து இஸ்ரேல் பெரிய அளவில் பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்கக்கூடும் என்று கருதப்படுகின்றது.

விமானம் திசை திருப்பப்பட்டு பலவந்தமாக இறக்கப்பட்டதை ஐ நா பொதுக் காரியதரிசி யுதாண்டும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

இரவில்

## யாழ். - மட்டக்களப்பு பஸ் சேவைக்கு பொலிஸ் காவல்

கல்முனை, ஞாயிறு

யாழ்ப்பாணம் - மட்டக்களப்புக்கு இடையில் நடைபெற்ற பஸ்சேவையில் மாற்றம் செய்யப்படுவதுடன் இரவில் செல்லும் பஸ்களில் பொலிஸ் காவல் ஏற்பாடு செய்யவும்மட்டக்களப்புஇ. போ. ச. டிப்போ நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்திலிருந்துமட்டக்களப்பை நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸில் நடந்த பயங்கரக் கொள்ளையைத் தொடர்ந்தே இந்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது

இக்கோஷ்டியின் தீவிர கொள்ளை மட்டக்களப்பு மாவட்டத்திலே, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### சுதந்திரக்கட்சிக் கிளை

கல்முனை, ஞாயிறு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கிளைகள் மட்டக்களப்பு மாவட்டத்திலே பல திறக்கப்பட்டுள்ளன. பல கிளைகளை மேலும் திறக்கநடவடிக்கை எடுக்க இருப்பதாகமட்டக்களப்புஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கிளை பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். மட்டக்களப்பு, கல்குடாத் தொகுதி ஆகிய வைகளுக்கு, சுதந்திரக் கட்சியின்சார்பில் போட்டியிட அபேட்சகர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### ஆஸ்பத்திரிக்கு பெரியார் நன்கொடை

சென்னை, ஆகஸ்ட். 31

திராவிடக்கழக பெரியார் ராமசாமி மீண்டும் வேலூர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருக்கிறார். அறுவைசிகிச்சை செய்யப்பட்ட இடத்தில் அவருக்கு மீண்டும் வலி ஏற்பட்டதால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

பெரியார் சிகிச்சைபெறும் ஆஸ்பத்திரிக்கு அவர் 500 ருபா நன்கொடையும் வழங்கினர்.

### நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் டாக்டர் கே புவனேந்திரன் எம். ஆர். சி. பி (லண்டன்) எம். பி. பி. எஸ். (இலங்கை) இன்று முதல் டாக்டராக நியமனம் பெற்றுள்ளார்.

# பிரதமர் பதவியும் கட்சியின் தலைவர் பதவியும்

## இந்திராவின் விளக்கம்

காங்கிரஸ் கட்சியில் தலைவர் பதவியின் அதிகாரங்கள்பற்றியும், பிரதமமந்திரியின் அதிகாரங்கள்பற்றியும் திருமதி இந்திராகாந்திகாங்கிரஸ் கட்சியின்பாராளுமன்றக்குழுக்கூட்டத்தில்விளக்கியுள்ளார்.

சபையின் நம்பிக்கையைப் பெறவில்லை என்று பார்லிமெண்ட் முடிவு செய்யுமானல், அந்நபர் பதவியிலிருந்து வெளியேற வேண்டும் என்று திருமதி காந்தி குறிப்பிட்டார். நெருக்கடி நிலவியபோது இந்த ஆலோசனையை திரு வி. கே. கிருஷ்ணமேனன் பிரதமமந்திரியிடம் குறிப்பிட்டிருந்தார். கட்சியின் நம்பிக்கையை இழந்தாலும்கூட பிரதம மந்திரிப் பதவியில் நீடிக்க முடியும் என்று திரு. மேனன் கூறியிருந்தார்.

கூட்டம் அமைதியாகவே நடைபெற்ற போதிலும் ராஜ்யசபை அங்கத்தவர் திரு. அபீத்அலி இ. தே. தொழிற்சங்க காங்கிரஸ் தலைவர் லேசாகப் பரபரப்பை ஏற்படுத்தினார். பேசுவதற்கு அவகாசம் கோரி திருமதி காந்திக்கு குறிப்பு ஒன்றை அனுப்பினார். ஆனால் இது இறுதி தொடர் கூட்டமாதலின் கட்சித் தலைவர் மட்டுமே பேச வேண்டும் என சில அங்கத்தவர்கள் கூறினர்.

இக்கருத்தை பிரதமமந்திரி ஏற்றார். ஆட்சேபித்து திரு. அபீத் அலி மற்றொரு குறிப்பை அனுப்பினார். 'இது ஹிட்லரின் பாஸிஸ வழி' என்று அவர் தமது குறிப்பில் கூறியிருந்தார்.

பாங்குஅரசுஉடைமையாக்கப்பட்டதை திருமதி காந்தி குறிப்பிடுகையில், தாழ்த்தப்பட்ட மக்களிடையே புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்று கூறினார். காங்கிரஸ் தலைமையிலுள்ள தொழிலாளர் யூனியன்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி செல்வாக்கை பெருக்கலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

## வி. கே. மேனனைத் திருப்பி அழைக்க இந்திரா விருப்பம்

வெளியேறிய தனிப்பட்ட காங்கிரஸ்காரர்களும் ஒரே மாதிரி நோக்குள்ள கட்சிகளும் காங்கிரஸுக்குத் திரும்புவதைத் தாம் விரும்புவதாக பிரசங்க இறுதியில் திருமதி இந்திரா காந்தி சூசகமாக அழைப்பு விடுத்தார். திரு. வி கே. கிருஷ்ண மேனன் போன்றவர்களை பிரதமமந்திரி நினைவில் கொண்டு இவ்வாறு கூறியிருப்பார் என அரசியல் வட்டாரங்கள் விளக்கம் தந்தன பாரதீய கிராந்தி தளம் மீண்டும் காங்கிரஸில் சேர வேண்டும் என்றும் பிரதமமந்திரி விரும்பியதாகத் தெரிகிறது.

பிரதமமந்திரி அல்லது முதன்மந்திரி ஜனநாயக அமைப்பின் அத்திபாரமாகும். பிரதமமந்திரிப் பதவிக்கு ஒரு நபர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் பின்னர் அவருக்கு உசிதப்படி செயற்படும் உரிமை முழு அளவில் இருக்க வேண்டும். அவர் பார்லிமெண்டின் நம்பிக்கையை இழந்தால் பதவியிலிருந்து வெளியேற வேண்டும். தான் தோன்றித்தனமாகச் செயற்படுவதன்மூலம் ஜனநாயகம் வெற்றிபெற முடியாது என்று திருமதி இந்திர காந்தி குறிப்பிட்டார்.

பிரதமர் மேலும் கூறியதாவது: கட்சியே விரிவான கொள்கைகளை வகுக்கிறது. அக்கிராசனரின் துறை அதுதான். கொள்கைகளையும் திட்டங்களையும் அமுல் செய்வது பார்லிமெண்ட் மற்றும் சட்டசபைகளின் பொறுப்பாகும்.

காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கட்சியின் தலைவரான பிரதமர், காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் பொறுப்புடையவர் அல்ல. ராஜ்ய அரசுகளுக்கும் மற்றும் உலக நாடுகளுக்கும் அவர் பொறுப்புடையவர்.

ஆகவே பிரதமமந்திரியின் யுக்தானுசாரத்தில் குறுக்கிடுவது சரியல்ல.

பார்லிமெண்டின் நம்பிக்கை இருக்கிறவரையில் பிரதமர் தமது பதவிப்பொறுப்பில் நீடிப்பார் என்று இந்திராகாந்தி கூறினர்.

இந்திராகாந்தி மேலும் கூறியதாவது:-

பிரதம மந்திரி பதவியில் இருப்பவர் மெஜாரிட்டி கட்சியின் நம்பிக்கையைப் பெறமுடியாதவர் (?) பெறுமுறுப்பதாக பார்லிமெண்ட் கருதினல், அவ்வாறு கருதப்படுபவருக்கு (பிரதமர்) பூரண யுக்தானுசாரம் இருக்கவேண்டும்.

1954-ம் வருடத்தில் வெளியான ஒரு காங்கிரஸ் பிரசுரத்தில்நேருஜி கூறியது பற்றி குறிப்பிட்டிருந்ததை பிரதமர் இந்திரா காந்தி சுட்டிக் காட்டினர்.

பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர், காரியதரிசிகள் கூட்டத்தில் நேருஜி பேசுகையில் கூறியதாவது:- பிரதேச காங்கிரஸ் கமிட்டிகள் அனுமதிக்கின்றவரையில் தான் மந்திரிகள் பதவியில் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது மிகவும் நியாயமற்றதாகும். ஜனநாயகம் இந்த ரீதியில் செயல்படமுடியாது. ஜனநாயகம் வெறும் கேலிக்கூத்தாகி விடும்

### பிரிட்டன் உதாரணம்

நேருஜி கூறிய விதத்தில் இந்த விவகாரம் பைசல் செய்யப்பட்டுள்ள பிறநாடுகள் பற்றி பிரதமர் இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

பிரிட்டனில் தொழிற்கட்சியின் மத்திய கமிட்டித்தலைவராக இருந்த ஹரால்ட் லாஸ்கிக்கும் பிரிட்டிஷ் பிரதமர் கிளமண்ட் அட்லிக்கும் இடையே சர்ச்சை ஏற்பட்டது.

கட்சியின் உச்ச அதிகாரம் பற்றி லாஸ்கி கூறியதை அட்லி ஒப்புக்கொள்ளவில்லை என்று இந்திரா காந்தி கூறினர்.

தேசத்தில் அபிவிருத்தி ஏற்பட்டிருந்தும், ஏழைகளாகவும், வசதிகளற்றவர்களாகவும் உள்ள மக்களிடையே சோர்வு நிலவியது என்று பிரதமர் கூறினர்.

திடீரென்று இந்த சோர்வு உணர்ச்சி மாறியது. அதற்குக்காரணம் பாங்கு தேச உடைமை என்ற சிறிய நடவடிக்கையே என்று பிரதமர் கூறினர்.

பாங்கு தேச உடைமைத் திட்டத்திற்குமக்களிடையே கிடைத்துவரும் ஆதரவு பற்றித் தாம் வியப்படைந்துள்ளதாகப் பிரதமர் ஒப்புக்கொண்டார். கற்றறிந்தவர்களிடையே இந்த நடவடிக்கைக்கு ஆதரவு இருக்கும் என்பதை மட்டுமே தாம் எதிர்பார்த்தாக அவர் கூறினர்.

நிறைய எதிர்பார்க்கும்படியாகச் செய்துள்ள முதல் நடவடிக்கை இது என்று இந்திரா காந்தி சொன்னர். நிதி வசதிகள் போதியனவாக இல்லை. இதனல் உடனடித் தேவைகளை 1975-க்குள் பூர்த்திசெய்வது இயலாது என்று பிரதமர் கூறினர்

சென்ற சில ஆண்டுகளில் உற்பத்தி பெருகியது என்பது உண்மையே என்று பிரதமர் கூறினர்.

ஆனல் அவற்றுடன் கூடவே சமூக ஏற்றத்தாழ்வுகளும் ஏற்பட்டன என்று அவர் சொன்னர்.

அரசியல் சமூக நெருக்கடிகள் பொருளாதார வளர்ச்சியைக் குலைத்துவிடலாம் என்று அவர் கூறினர்

பாங்கு தேச உடைமை சோஷலிச டவடிக்கையாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. சோஷலிச நாடுகளாக இல்லாத பல நாடுகளில் பாங்குகள் தேச உடைமையாக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் கூறினர்.

எப்படியோ பாங்கு தேச உடைமை, அரசுக்கு ஆதரவான ஓர் அரசியல் சூழ்நிலையை உண்டாக்கி இருக்கிறதென்று அவர் சொன்னர். சமூக நடவடிக்கைகளுக்குப் பணம் கிடைக்குமென்பதில் ஐயமில்லை என்றார் அவர்.

சோஷலிசம், முதலாளித்துவம். கம்யூனிஸம் ஆகியவற்றுக்கு முன்பு இருந்த அர்த்தங்கள் இப்போது கிடையாது என்று பிரதமர் கூறினர்.

### காந்திஜியும், ஏழைகளும்

இது மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழா வருடம் என்பதை பிரதமர் இந்திரா காந்தி எம். பி. க்களுக்கு நினைவுறுத்தினர்.

ஏழைகளின் தேவைகளை காந்தியடிகள் வற்புறுத்தினர் என்று அவர் குறிப்பிட்டார்.

உலகவரலாற்றில் முதன் முறையாக, சாதாரண மக்கள் தங்களுடைய உரிமைகள், தேவைகள் பற்றி உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று பிரதமர் கூறினர்.

---

வினுத்தாள்கள் கொடுக்கப் பட்டுவிட்டதாம். இத்தகைய குழப்பத்தால் பல அரசாங்க ஊழியர்கள் இதே பரீட்சையைத் திரும்பவும் எடுக்கவேண்டிய அவல நிலைக்கு ஆட்பட்டுள்ளார்கள் எனத் தெரியவருகிறது.

---

... திரு. எஸ் ஏ. குணசேகரா, திரு. பி. பிச்சமுத்திரையான் ஆகியோர் பேசினர்கள். திரு. ஏ. ஆர். ஆர் ஆறுமுகம் வரவேற்புரையும் திரு எல். சுப்பையா நன்றியுரையும் கூறினர்கள். யூனியன் நாவலப்பிட்டி கிளைப்பிரதிநிதி திரு. யூ. நவரட்ண இக்கூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கையின் மலையகப் பகுதியிலே தேயிலை ரப்பர் தோட்டங்களை ஏற்படுத்த விரும்பிய ஏகாதிபத்தியவாதிகள் தென்னிந்தியாவிலிருந்து அவற்றில் வேலை செய்ய ஆட்களைக் கொண்டு வந்தார்கள். ஈழநாட்டிலே பொன்னும் மணியும் நிலத்திலே தேடுவாரற்றுக் கிடப்பதாகவும், அங்கே வேண்டிய சுகபோகங்களை எல்லாம் தாராளமாக அனுபவிக்கலாமென்றும் ஏமாற்றி அழைத்துவந்தார்கள். ஆனல் அப்பாமர மக்கள் அனுபவித்த இன்னல்களுக்கு அளவேயில்லை. வந்த வழியிலே இறந்தார்கள். பசியினலும் குளிரினலும், மலேரியாவினலும், வனவிலங்குகளாலும் பணமின்மையாலும், அதிக வேலைப்பளுவாலும் வேலைக்கமர்த்தியவர்களின் எதேச்சாதிகார அடி, உதைகளினலும் ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்தார்கள். கோழிக்கூடு போன்ற லயத்துக்காம்பராக்களுக்குள் பெண்டுபிள்ளைகளோடு வெகு கஷ்டமான நிலையில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வாழ்ந்தார்கள். இப்படியே நூறு ஆண்டுகள் சென்றன. தோட்டங்களிலே உழைத்து உருக்குலைந்த அவர்களுக்கு ஆதரவாகவும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும் இலங்கை சமசமாஜக்கட்சித்தலைவர்களே முதன்முதலில்செயலாற்ற முன்வந்தார்கள்

1939-ம் ஆண்டிலேதோட்டத்தொளிலாளர் மத்தியிலே அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் யூனியனை இலங்கை சமசமாஜக்கட்சித் தலைவர்கள் ஆரம்பித்தனர். வேலைநிறுத்தப் போராட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்றன. இந்த நாட்டின் சரித்திரத்திலேயே முதல்தடவையாகக் கோவிந்தன் என்றதொழிலாளி முள்ளோயா தோட்டத்தில் ஆட்சியாளரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானன். பின்னர் அடங்கிக்கிடந்த தோட்டத் தொழிலாளர்கள் திரண்டெழுந்து நேரடியாகப் போராடினர்கள். அதனல் சிலசதங்கள் சம்பள உயர்வும்அற்ப சலுகைகளும் கிடைத்தன. ஆயின் இன்றையதோட்டத் தொழிலாளர்களின் ஓரளவு முன்னேற்றமான நிலைக்கு

---

ஆலய வீதி மருங்கில், சைவ வேளாளர் குலத்தில் ஆறுமுகம்பிள்ளையின் வைத்தியப் பரம்பரையில் பிறந்தவர் சின்னத்துரைப்பிள்ளை அன்னரது 14-வது சிரார்த்த தினம் இவ் வருடம் கொண்டாடப்படுகின்றது.

பிரபல வைத்தியராக விளங்கிய பழனிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராக பிறந்த இவருக்கு தெய்வானை, சின்னத் தங்கம், பெரியதம்பி என்ற மூன்று சகோதரர்கள் இருந்தார்கள்.

இளமை தொட்டு தெய்வ பக்தியும் தரும சிந்தையும் நற்குணங்களும் உடன் வளர வளர்ந்து தந்தையின் சீடராக வைத்தியக் கலையும், மருந்து செய்முறையும் பயின்று வைத்திய ஆராய்ச்சியில் ஈடுபட்டு விஷகடி வைத்தியம், சிறுபிள்ளை வைத்தியங்களிலும் தொய்வு, குன்மம், பாண்டு முதலிய பெரு நோய்களை மாற்றும் திறமையிலும் பெயர் பெற்று விளங்கினர் தனக்கென வாழாது பிறர்க்குரியராக வாழ்ந்த தான் கற்ற வித்தைகளை தன்னுடன் மறைந்து போகா வண்ணம் தன் பிற் சந்ததிக்கும் கற்பித்தார்.

தனது மூத்த புதல்வியான மங்கையர்க்கரசியை மலாய் நாட்டு வித்தியாதிகாரியாகக் கடமையாற்றிய சங்கீத வித்வான் சி செல்வநாயகத்துக்குத் திருமணம் செய்து வைத்தார் இவரது பேரப் பிள்ளைகளில் ஒருவரான செல்வி புஷ்பா (இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை) ஈழத்தின் சிறந்த பெண் பேச்சாளராகவும், மற்றொரு பேரப்பிள்ளையான செல்வேந்திரன் தெல்லிப்பளை கூட்டுறவு ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியாகவும் கடமையாற்றுவது குறிப்பிடத்த கதாகும்.

சின்னத்துரையின் இரண்டாம் புதல்வியான ஸ்ரீமதி விசாலாம்பாள் அரியகுட்டி கொழும்பில் சிறந்த ஒரு சமூக சேவையாளராகக் பணி புரிந்து வருகின்றார். திருமதி பாக்கியலட்சுமி, அன்னலச்சுமி ஆகியோரும் இவரது மருமக்களாவர்.

இவர் சைவசமய நியமாசாரங்களுக்கும், நல்லொழுகக நெறிக்கும் எடுத்துக் காட்டாக வாழ்ந்து, வருடந்தோறும் கதிர்காம யாத்திரை செய்து, அன்னதானம் வழங்கி மகிழ்தவர் அவரது பெயரால் இன்றும் நல்லூர் உற்சவத்தின் போது சின்னத்துரை தண்ணீர்ப் பந்தல் என நிறுவப் படுவதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

—திரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தேவைகளை அதிகரித்துக்கொண்டே செல்வது நாகரிகமல்ல. தானே விரும்பி தேவைகளைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 16-ந் திகதி (1 - 9 - 69)


## வெங்காய சங்கடம்

யாழ்ப்பாணத்திலே உற்பத்தியான வெங்காயத்தை, உத்தரவாத விலைப்படிவாங்கக் கடமைப்பட்டுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தார், திடீரென சென்றவாரம்வாங்க மறுத்துவிட்டதால், ஏராளமான வெங்காயம் இங்கு அழுகி நாசமாகவேண்டியேற்பட்டது. இதற்குக் காரணம் என்னவெனில், வெளிநாட்டிலிருந்து வெங்காயம் அதே சமயத்தில் இறக்குமதியானதால் தான், உள்நாட்டுவெங்காயத்தை வாங்கவில்லையாம்! இது நாட்டுக்குச் செய்யும் பெரும் துரோகமாகும்.

உள்நாட்டில் உணவுஉற்பத்தியைப் பெருக்கி, தன்னிறைவு ஏற்படுத்தவும், நமது செல்வத்தை வெளியேற்றுமல் தடுக்கவும், இங்குவேலையில்லாக்கஷ்டத்தைக்குறைக்கவும்கூடிய மேலான கொள்கையை கடைப்பிடிப்பதாகக் கூறும் அரசாங்கம், இந்த அவலநிலையை எப்படிஅனுமதிப்பதென் பதுதெரியவில்லை இதற்கு யார் பொறுப்பு? யாழ்ப்பாணத்திலே வெங்காயம் அறுவடையாகும் சமயத்தில் ஏன் வெளிநாட்டிலிருந்து அதே சரக்கை இறக்குமதி செய்தனர்? இங்குவெங்காயத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் அவதிப்படும்போது, அதை இறக்குமதி செய்வதாயின் அது நியாயமாகும். யாழ்ப்பாணத்திலே ஏராளமான வெங்காயம் அறுவடையாவதை அறிந்தும் இதன் இறக்குமதியை அனுமதித்தவர்கள் யாராயினும் அவர்கள் அப்பொறுப்பைவகிக்க சற்றும் தகுதியற்றவர்கள். அவர்கள் மீது கடும்நடவடிக்கை எடுத்து, இனி இவ்வித 'விவசாயக்கொலைகள்' நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டியது விவசாய அமைச்சரின் மேலான கடமையாகும்.

தங்களால் இந்தப் பொறுப்பை சரிவர நிறைவேற்றமுடியாவிடில், தங்கள் ஏகபோக உரிமையை கூட்டுறவுமொத்த

மாக விசாரித்து உண்மை நிலையை அறிந்து கொண்டது வரவேற்கத்தக்கது. வடபகுதி விவசாய உற்பத்தியாளர் சங்க டைரக்டர்களுடன்அவர் கலந்து யோசித்து, உற்பத்தியாளர்களின் சங்கடங்களைத் தெரிந்துகொண்டு அவற்றை தீர்க்க உறுதியளித்துள்ளதாக, அச்சங்கத்தால் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கை தெரிவிக்கிறது.

சிறப்பாக வெங்காயத்துக்கான உத்தரவாதவிலை பல வருடங்களுக்குமுன் நிர்ணயிக்கப்பட்டது. பின்னர்ரூபாயின் மதிப்பைக் குறைத்ததாலும் 'பீக்ஸ்'திட்டத்தை ஏற்படுத்தியதாலும், உற்பத்திச் செலவுகள் அதிகரித்துவிட்டன. அதற்கேற்றபடி வெங்காய உத்தரவாத விலையைக் கூட்டாததால் வெங்காய உற்பத்தியாளர் நஷ்டமடைந்து அதைக் கைவிடவேண்டி ஏற்பட்டுள்ளதாக கோப்பாய்ப் பிரதிநிதி திரு. கதிரவேலுப்பிள்ளை, ஆட்சிமன்றத்திலே வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி பேசுகையில் நன்கு அறிவுறுத்தினர். நெல்லின் உத்தரவாத விலையை உயர்த்திய அரசாங்கம் வெங்காயத்தின்விலையையும் அதேசமயம் உயர்த்தியிருக்கவேண்டும். இதன் அவசியத்தைக் கமிஷனர் உணர்ந்து, கூடிய சீக்கிரத்தில் விலையைத் திருத்தி அமைப்பதற்கான ஏற்பாடு செய்வதாக உறுதிகூறியுள்ளதாகத் தெரிகிறது இதில்வீண் காலதாமதம் செய்யாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமென்றே வெங்காய உற்பத்தியாளர் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

கொழும்பிலே அதிகாரிகள் உட்கார்ந்துகொண்டு, இங்குள்ள உண்மைநிலையை நேரில் அறியமுடியாதபடி இருப்பது பெரியகுறை. இதற்காக ஒரு விசேஷ கமிட்டியை நியமித்து, அதில் இந்த யூனியன் பிரதிநிதி ஒருவரையும் நியமிக்கவேண்டுமெனகமிஷ

# உள்ளூர் வெங்காய உற்பத்திக்கு ஊக்கமளிக்க தயங்குவதேன்?

## ஆட்சிமன்றத்தில் கோப்பாய் எம். பி.

இந்த அரசாங்கம் வெளிநாட்டு வெங்காயத்தை விலை கொடுத்து வாங்குகிறது. ஆனல் உள்நாட்டு வெங்காய உற்பத்தியாளர்களுக்கு பணம் கொடுக்கத்தயங்குகின்றது என்று கோப்பாய் எம் பி. வரவு-செலவுத்திட்ட விவாதத்தின் போது அண்மையில் ஆட்சிமன்றத்தில் பேசும்போது கூறினர். அவர் பேச்சின் ஒரு பகுதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

கௌரவ உப சபாநாயகர் அவர்களே, இந்த நேரத்தில் எனக்குப் பேச அவகாசம் தந்ததற்கு நான் முதலில் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த வரவு செலவுத் திட்ட விவாதத்திலே முக்கியமான பல அம்சங்கள் பற்றிப் பேசப்பட்டன. அத்துடன், முக்கியமில்லாததும் தொடர்பு இல்லாததுமான பல அம்சங்கள்பற்றியும் பேசப்பட்டன கௌரவ நிதி அமைச்சருடைய பேச்சிலேயும் அரசாங்க தரப்பிலே பேசுகின்றவர்களுடைய பேச்சிலேயும் ஒரு விஷயம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருந்தது. அதாவது, விலைவாசிகளைக் குறைக்க முடியாதென்று அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். நாட்டு மக்கள் வாங்கும் பொருட்களில் அத்தியாவசியமான பொருட்கள் பலஇருக்கின்றன. அவற்றின் விலைவாசிகளைக்கூடக் குறைக்க முடியாதென்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலே விலைவாசிகள் ஏறிக்கொண்டுதான்போகும் என்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளிலே கூட பொருட்களின் விலை உச்சத்திலே இருக்கின்றன என்றும் எடுத்துச் சொல்லி, வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாது, பொருட்களின் விலையைக் குறைக்க முடியாதுஎன்ற திட்டவட்டமான ஒரு கருத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

ஒரு பக்கம் சில விஷயங்களைப் பொறுத்த வரையிலே இது உண்மையாக இருந்தாலும் வாழ்க்கையின் பல துறைகளிலே அத்தியாவசியமாகத் தேவைப்படும்பொருட்களை நாம் விலைக்கண்கொண்டு கவனிக்கும் பொழுது இலங்கையிலே உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் என்றாலும் வெளி நாடுகளிலே இருந்து வரும் பொருள்கள் என்றாலும் சாரணமில்லாமல் உயர்ந்த விலைக்கு விற்கப்படுவதைக் காண்கிறோம். அதனைக்கட்டுப்படுத்தலாம். ஆனல், அந்த முயற்சியை அரசாங்கம் எடுக்கவில்லை. பொருட்களை அநியாயமான விலைக்கு விற்பனையாளர் விற்பதையும் அநியாயமான விலைக்கு உற்பத்தியாளர் விற்பதையும் அரசாங்கம் கட்டுப்படுத்தவில்லை ஆகவே விலைவாசிகள் ஏற்றத்தை தடுத்து நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது வருந்தத்தக்கது.

அடுத்ததாக 'இந்தப் பிரச்னையை விலைவாசிக்கட்டுப்பாடு, விலை குறைப்பு முதலிய வற்றுல் தீர்க்க முடியாது; எந்த விலையென்றாலும் அதைக்கொடுத்து வாங்கும் வல்லமையை மக்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்ற ஒரு கருத்துப்பட கௌரவ விஞ்ஞான ஆய்வு வீடமைப்பு அமைச்சர் சொன்னர். அப்படிச் சொல்லும் பொழுது, பொலன்னறுவையிலே 500 மெஷின்கள் ஒருநாளைக்கு விற்பனையாகின்றன என்று சொன்னர். அப்படிப் பல காரணங்களை எடுத்துச் சொல்லி, விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போகின்றதென்றாலும் அதற்கேற்ற விலைகளைக் கொடுத்து வாங்கக்கூடிய சக்தியை மக்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்ற கருத்துப்படப் பேசினர்கள். ஆனல் இந்த நாட்டிலே இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றியும் இந்த 'வாங்கும் பலத்தை' யாருக்குக்கொடுத்திருக்கிருர்கள் என்பதையும் ஆலோசித்தால் அந்தக் கூற்று ஒரு பிழையான கூற்றுகத் தோன்றுகின்றது

வாழ்க்கை நடத்துவதற்கு வேலை வாய்ப்புவேண்டும். வேலை வாய்ப்பு உடைய மக்களுக்கு மட்டும்தான் ஒரு சிலருக்கு மட்டும்தான், ஒரு பகுதியிலுள்ள மக்களுக்கு மட்டும்தான் சம்பள உயர்வு முதலியவற்றுல் உயர்ந்து கொண்டுபோகும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க வசதி செய்யப்படுகின்றதே யொழிய வேலையில்லாத்திண்டாட்டத்தினுல் கஷ்டப்படும் பக்களுக்கு வேலையில்லாமல் அதிகரித்துக் கொண்டேவரும் மக்களுக்கு வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்களை வாங்கும் தன்மையை, சக்தியை அரசாங்கம் கொடுக்கவில்லை. ஆகவே வேலையில்லாத திண்டாட்டம் பெருகிக்கொண்டு போகும் நிலையிலே மக்களுக்கு வரங்கும் சத்தியைக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்வது பொருந்தாது. அதற்குப் பரிகார[...]காண வேண்டுமென்றுல் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்திருக்க வேண்டும். முற்றும் தீர்க்க முடியாதுவிட்டாலும் ஓர் எல்லைக்குட்பட்ட [...]ளவுக்

படவில்லை இத்தகைய ஒரு சூழ்நிலை நாட்டிலிருப்பது பெரியதொரு குறையாகும் கடந்த நாலரை ஐந்து வருடங்களுள் விவசாயத் துறையில் முக்கியமாக உப உணவு உற்பத்தித்துறையில் இன்னும்பல சாதனைகளை செய்திருக்கலாம். முயற்சியும்சிந்தனையும்இல்லாததால் இவ்வித சாதனைகள் செய்யப்படாமல் எங்கள் நாட்டு பொருளாதார நிலையும் உணவு உற்பத்தி நிலையும் வேலை வாய்புக்களைப் பெறும் வாய்ப்புக்களும் மக்களைப்பாதிக்கும் அளவுக்கு வந்து விட்டது.

உருளைக்கிழங்குச் செய்கை எவ்வளவிக்கு வளர்ந்திருக்கிறதோ, உருளைக் கிழங்கு இறக்குமதியை நிறுத்தி அந்த உற்பத்திக்கு அரசாங்கம் எவ்வளவு ஊக்கம் கொடுத்திருக்கிறதோ அதைப்போல மற்ற உப உண்வு உற்பத்திக்கும் அரசாங்கம் ஊக்கம் கொடுக்கவில்லை என்றுசொல்ல வேண்டும், முக்கியமாக எனது தொகுதியைப் பொறுத்த மட்டிலே இந்த நாட்டிலே ஏறக்குறைய மூன்றிலொ பகுதிக்கு மேல் அரைவாசிக்குட்பட ஈர வெங்காய உற்பத்தி சிறப்பாக நடக்கிறது அதுவும் என்னுடைய தொகுதியிலே மிக அதிகமாக ஈரவெங்காய உற்பத்தி நடக்கிறது. நாணயமதிப்புக் குறைவின்பின் நெல் உற்பத்திக்கு ஊக்கமளிக்க நெல்லின் உத்தரவாத விலையை ஏற்றியதுபோல வெங்காயத்தின் உத்தரவாத விலையையும் ஏற்ற வேண்டுமென்று நாங்கள் பல முறை கேட்டோம் ஆனல் அரசாங்கம் அதற்கு செவிசாய்க்கவில்லை. பல முறை அதைப்பற்றி எழுதியும் அமைச்சர் அவர்களிடமிருந்து பதிலே கிடைக்கவில்லை. வெங்காயத்தைப் பொறுத்தவரையிலே உத்தரவாத விலை முன்னிருந்த நிலையிலே 'தான் இருக்கிறது. ஆனல் வெங்காயத்தை வெங்காயத்தை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிருர்கள். பருவமல்லாத காலத்தில் வெங்காயம் குறைந்துவிட்

—— நாடக விமர்சனம் ——

## லண்டன் வாழ்க்கை

கொழும்பு லயனல் வென்ட் தியேட்டரில் 'லண்டன் வாழ்க்கை' என்ற சமூக நாடகம் அரங்கேற்றப்பட்டது. ஈழத்தின் துருவ நட்சத்திரமான நடிகவேள் லடீஸ் வீரமணி பிரதம பாத்திரமேந்தி நடித்தார். எலெக்ஷன் கேட்டுதான் ஒரு எம். பியாகவர

யானதோற்றம் இயல்பான பேச்சு. இனிய முகத்துடன் இவர் ஒரு அப்பாவிப் பண்[...]கராக மேடையில் தோன்[...]ருர். 'கலாட்டா காதல்' 'பார்வதி பரமசிவம்' முதலிய பெயர் பெற்ற நாடகங்களில் [...] டன் [...] [...]கராக வந்து தம்மை ஒரு [...] பாத்திரமாக

# ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு இரவில் சென்ற பஸ்ஸை நிறுத்தி, பிரயாணிகளை இம்சித்து, துணிகரமாகக் கொள்ளை அடித்ததுபற்றி இங்கு பொதுமக்களிடையே அதிக கவலையும் பீதியுமேற்பட்டுள்ளது. இரவில் பஸ்ஸிலே பிரயாணம் செய்யவும் பயப்படுகிருர்கள்.

இதைப்பற்றி பொலிஸ் பெரிய அதிகாரிகள் தீவிரமாக விசாரித்து வருவதாகவும், சில பொலிசாரும் இதில் சம்பந்தப்பட்டிருக்கலாமென்று சந்தேகப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன. இந்தக் கிராகதச் செயலில் பொலிசார்யாரும் ஈடுபட்டிருந்தால் அதைவிட மோசம் வேறு இருக்க முடியாது. வேலியே பயிரை மேய்வதாயின் பயிரை யார் தான் காப்பாற்ற முடியும்? இந்தக் கிராகதச் செயல் செய்தவர்கள் சீக்கிரத்தில் பிடிபட்டுக் கடும் தண்டனை பெறுவரென்றே நம்புவோம்.

0 0 0

''அண்ணே ஓடாதீர்கள்'' என்று பஸ்ஸில் இருந்த சில பெண்கள் 'ஆண்களை'ப் பார்த்துக் கேட்டார்களாம் என்றாலும் சில 'ஆண்கள்' வேகமாக ஓடித் தப்பித்ததாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது.

பேராசையும், பயங்காளித்தனமும் நமது சமூகத்தில் அதிகரித்துவிட்டதாகவும், தம் உயிர் கொடுத்தும் பெண்மணிகளைக் காப்பாற்றும் வீரமும் துணிச்சலும் ஆண்களுக்கு இல்லாமற் போய்விட்டதே என்றும் ஓர் அன்பர் வெட்கத்துடன் மனம் புழுங்கிக் கூறுகின்ருர்.

இது மிக அசாதாரணமான பயங்கர சம்பவம். இனி இவ்விதம் நடக்காமல் தடுக்க பொலிசும், இ.போ.ச.வும் என்ன விசேஷ நடவடிக்கைகள் எடுக்கப் போகின்றன? பஸ்ஸிலே துப்பாக்கிப் பொலிஸ் காவல் வைக்கப் போகிருர்களாம். பொலிஸ் பந்தோபஸ்தை அதிகம் பலப்படுத்தவேண்டுமென்றும்சிலர் கேட்கின்ருர்கள்.

நாட்டில் இவ்வித பயங்கர குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்களே தங்களைக் காத்துக் கொள்ள தக்க ஒழுங்குகளைச் செய்து கொள்வதே சிறந்தது. மடியில் கனமிருந்தால் தான் வழியில் பயம் என்

பாஸ் பெற்றுள்ள ஆசிரியர்கள் தங்கள் குடும்பத்துடன் நயினதீவு முதலிய இடங்களுக்கு யாத்திரை செய்வதாயும் இராணுவத்தினரும் துப்பாக்கி ஆயுதங்களுடன் இதே ரயிலில் பிரயாணம் செய்வதாயும் தெரிகிறது.

பள்ளிக்கூட விடுமுறை காலங்களில் இலவச பாஸ் பெற்ற ஆசிரியர்கள் முதலியவர்களுக்காக விசேஷ ரயில்களோ அல்லது தனிப் பெட்டிகளோ ஏற்படுத்தி ரிசர்வ் செய்தால், பணம் கொடுத்து டிக்கெட் வாங்கி யாத்திரை செய்யும் பொது மக்களுக்கு ரயிலில் சிறிதாவது இடம் கிடைக்கலாம். ரயில் பிரயாண சங்கடங்களைக் குறைக்க அமைச்சரும் நமது எம் பி.மார்களும் தக்க முயற்சி எடுப்பார்களா?

0 0 0

மாலினணங்கை யஞ்சமதிலிலங்கைக்கு மன்னன், வேலினன் வெகுண்டெடுக்கக் காண்டலும் வேந்நாவன், நூலினேக்கி நக்குநொடிப்பதோரளவில் வீழக், காலினலூன்றியிட்டார் கழிப்பாலைச் சேர்ப்பனரே.

— அப்பர் அடிகள்

## விண்ணப்பப் பத்திரத்தின் விலை?

வெள்ளவத்தை, ஞாயிறு தபாற் சந்தோர் தலைவர், தந்தியாளர் பரீட்சைக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கும் முடிவுத்திகதி ஆகஸ்ட் 25-ந்திகதியாகும். இதன் பின்னரும் விண்ணப்பப் பத்திரங்கள் கோரி அனேகர் விண்ணப் பித்துள்ளனர். ஆனல் இனிமேல் எவருக்கும் விண்ணப்பப்பத்திரம் வழங்க முடியாது என்று போஸ்மாஸ்டர் ஜெனரல் உத்தரவிட்டுள்ளார்.

இதனல் விண்ணப்பப்பத்திரங்களுக்கு ஏகப்பட்ட கிராக்கி ஏற்பட்டு கொழும்பில் ஒரு விண்ணப்பப்பத்திரம் சுமார் 5ரூபா முதல் 15 ரூபா வரை விற்பனையாகியதாம். முன்னர் சேகரித்து வைத்த சிலரே இப்படி விற்றனராம்.

## வெங்காய...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சத் தலைவர் திரு. என். ரி. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ் அரசாங்கஅதிபர், விவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாய அமைச்சரின் மேலான கடமையாகும்.

தங்களால் இந்தப் பொறுப்பை சரிவர நிறைவேற்றமுடியாவிடில், தங்கள் ஏகபோக உரிமையை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தார் நீடித்து வைத்துக்கொண்டிருப்பது இரட்டிப்புத் தீங்காகும். வர்த்தகர்மூலம் விற்க சுதந்திரமிருப்பின், உற்பத்தியாளர்களுக்கு நஷ்டமேற்படாமலும், மிக முக்கியமான ஓர்உணவுப்பொருள் நாசமாகாமலும் தடுத்திருக்கலாம். இதைப்பற்றிய பலத்த புகார் இளம்பியதும், விவசாய சேவைக் கமிஷனர் திரு. எஸ் பி. சேனநாயகா, யாழ்ப்பாணத்துக்குவந்து நேர்முக நேரில் அறியமுடியாதபடி இருப்பது பெரியகுறை. இதற்காக ஒரு விசேஷ கமிட்டியை நியமித்து, அதில் இந்த யூனியன் பிரதிநிதி ஒருவரையும் நியமிக்கவேண்டுமென கமிஷனர், விவசாய அமைச்சுக்கு சிபார்சு செய்வதாகக் கூறியுள்ளார். உணவு உற்பத்தியில் தன்னிறைவுக்கொள்கைனய வெற்றிகரமாகநிறைவேற்றி வருவதாகப்பெருமையடித்துக்கொள்ளும் அரசாங்கமும், சிறப்பாக பிரதம மந்திரியும் இதில் உடன் கவனம்செலுத்தி, வெங்காயஉற்பத்தியாளரின் நியாயமான குறைகளைத் தீர்க்க எல்லா நடவடிக்கையும் எடுப்பாரென்றே நம்புகிறோம்.

# வடக்குக்கு 1000 தொன் விதை உருளைக்கிழங்கு

அளவெட்டி, ஞாயிறு

வெளிநாடுகளிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு ஆயிரம் தொன் விதை உருளைக் கிழங்கு இறக்குமதி செய்யப்பட இருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் நிலவிய விதை உருளைக் கிழங்கு தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய யாழ். மாவட்டத்துக்கு 1000 தொன் விதை உருளைக் கிழங்கு தேவையென யாழ். மாவட்டவிவசாய அதிகாரி திரு. பொ. மாணிக்கவாசகர் அரசாங்கத்திடம் கோரியிருந்தார்.

இதை அடுத்து உதவி விவசாய அதிபர் திரு. ஜினேந்திரராசா வெளிநாடுகளில் இருந்து 1000தொன் விதை உருளைக்கிழங்கு பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்துள்ளாராம்.

யாழ். மாவட்ட விவசாய அதிகாரி பொ. மாணிக்கவாசகர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் உடனடியாக தங்களுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்குப் பெறுமதியை ரூத்தல் 70 சதப்படிவிவசாயப்போதனாசிரியர்களிடம் செலுத்த வேண்டும் என கோரியுள்ளார்.

இந்தவிதையைப்பெறமுன் இந்த செய்கைக்குத் தேவையான உரத்தில் 50 வீதத்தையாவது முதல் வடமாகாண விவசாய விற்பனை ஐக்கிய சமாசத்திடம் இருந்து பெற்று அங்கத்தவர்களுக்கு விநியோகிக்கவேண்டும் எனவும் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களை மேலும் கோரியுள்ளார்.

## வயோதிபர் தற்கொலை

யாழ்ப்பாணம், திங்கள்

கொழும்புத்துறைச் செட்டித்தெருவைச் சேர்ந்த 88 வயதுடைய வயோதிபரான வைரவநாதன் தமது வீட்டுக்கு பக்கத்திலுள்ள பூவரசு மரத்தில் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்

மரண விசாரணை அதிகாரி திரு என் ராஜநாயகம்மரண விசாரணை நடத்தினர்.

நீண்ட காலமாக சுகவீனமுற்றிருந்ததாலேயே அவர் விரக்தியடைந்து தற்கொலை செய்து கொண்டதாக விசாரணையில்தெரியவந்தது.

(வேல. நிரு)

—

## நாடகங்களுக்கு பாராட்டு

வெள்ளவத்தை, ஞாயிறு

''சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற மஹாகவியின் 'கோடை', சிவபாலனின் 'இவர்களுக்கு வேடிக்கை' ஆகிய பரிசோதனை நாடகங்கள் எமது நாடகரசிகர்கள் மனதில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளன.''

இவ்வாறு கொழும்பில் கடந்த போயாதினக்கருத்தரங்கில் திரு. நெல்லை. க. பேரன் பேசுகையில் கூறினார். திருவாளர்கள் கந்த கதிர்காமநாதன், சபா இராசேந்திரன் ஆகியோரும் பேசினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

றப்பட்டது. ஈழத்தின் துருவ நட்சத்திரமான நடிகவேள் லடீஸ் வீரமணி பிரதம பாத்திரமேந்தி நடித்தார். எலெக்ஷன் கேட்டு தான் ஒரு எம். பியாகவர வேண்டும் என்று ஆசைப்பட்ட சீமானாகிய சித்திர புத்திரனுக்குச் சகல நவநாகரீக மோகங்களின் உருவமேயான மனைவியொருத்தி இரண்டு பிள்ளைகள். மனைவி லேடீஸ் கிளப், நைட் கிளப் என்று ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகிறார். கணவனோ எலெக்ஷன் எலெக்ஷன் என்று சொத்தையெல்லாம் பாழாக்குகிறார். தமிழ் சரியாகத் தெரியாமலேயே தமிழுக்குத் தொண்டுசெய்யப்போகிறேன் என்று சொல்லிக் கொண்டு இறுதியில் ஏமாந்துபோகிறார். பொதுமக்கள் இந்தப்பெரிய மனிதனது உண்மைத் தோற்றத்தை உணர்ந்து இவரைத் தோற்கடித்து விடுகிறார்கள். சுப்பிரமணிய பாரதியை 'சப்பிரமண்ய பராத்தி' என்று தெரியாமல் உச்சரிக்கும் பெரிய மனிதர்கள் அனேகர் இந்தக் கொழும்பிலும் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் அரசியல் வேடமிட்டுப் பொதுமக்களை ஏமாற்ற முனைகிறார்கள். இனி இவர்கள் மேல்படிப்புக்காகச் சீமைக்கு அனுப்பிய பிள்ளைகளும் ஆளுக்கொவ்வொரு 'காதல்'களைக் கொழுவிக் கொண்டு தாய் தந்தையரைக் கை கழுவி விடுகிறார்கள். இதற்கெல்லாம் பெரிய இடத்து வளர்ப்பு முறைதான் காரணம் என்ற கருத்துக்களை மிக நல்ல முறையில் தெளிவாக இந்த நாடகம் புலப்படுத்தியது.

பெரியமனிதனாக நடித்த லடீஸ் வீரமணிதமது முழுத்திறமையையும் காட்டியிருந்தார். பாத்திரத்துடன் ஒன்றித்துச் சிலமணி நேரங்கள் இவரே பெரிய சீமான் சித்திரபுத்திரனாகவும் ஆங்கில தாசன்- ஆடம்பரலோலன் மதுப்பிரியன் என்றெல்லாம் சொல்லத்தக்கவகையில் தத்ரூபமாக நடித்தார் ஜெயகாந்தனின் யாருக்காக அழுதான் நாடகத்தில் சர்வர்யோசேப்புவாக எளிமைத் தோற்றத்தில் நடித்துப்புகழ்பெற்ற லடீஸ் வீரமணியா இப்படி நிமிடத்திற்கொரு உடைகளுடன் பெரியமனித தோரணையில் ஆங்கிலமும் பேசிநடித்தார் என்று பலரசிகர்கள் மூக்கில் விரலை வைத்தார்கள். என்ன இருந்தாலும் லடீஸ் நடிகவேள்தான்.

இனி, லடீசுக்குத் தமிழ் சொல்லிக் கொடுக்க வந்த தமிழ்ப்பண்டிதராக 'ராம் தாஸ்' வருகிறார். எளிமை ...கிறார். 'கலாட்டா காதல்' 'பார்வதி பரமசிவம்' முதலிய பெயர் பெற்ற நாடகங்களில் நடித்த இவர் 'லண்டன் வாழ்க்கையிலும்' பண்டிதராக வந்து தம்மை ஒரு ...சித்திர பாத்திரமாக நிரூபித்துவிட்டார்.

பெரிய மனிதரின் மனைவியாக நடித்த ஜெயந்தி நிமிடத்திற்கொரு நாகரீக உடைகளுடன் தோன்றினார். இவரிடம் நடிப்பைவிடக் கவர்ச்சிதான் அதிகமாக இருந்தது. மகளாக வந்த ரோகிணியும் மகனாகவரும் பத்மநாதனும் ஓடிப்பிடித்துவிளையாட்டுக் காட்டும் கட்டம் அபாரம்!

இனி, லேடீஸ் கிளப் தலைவியாக வரும் இந்திராதேவி ஒரு அசல் கொழும்பு-7 நங்கை போலவே கலகலப்பாகவும் நளினமாகவும் செல்லமாகவும் பேசி தான் சொல்லவந்த புதிய இராமாயணக் கதையையும் சொல்லி ரசிகர்களின் மனத்தில் தமது இயல்பான நடிப்புத் திறமையைக் காட்டி நீங்காத இடம் பெற்றுவிட்டார்,

தேர்தல் வேலைகளைக் கவனிக்கும் கையாட்களாக வந்த முஸ்லிம் நைனாவும், மற்றவரும் சிறப்பாகச் செய்தார்கள். செக்ரட்டரியாக வந்தரும் பாத்திரமுணர்ந்து செய்திருந்தார். அரசியல் மோகம் பிடித்து அந்நிய- லண்டன் மோகத்தில் மூழ்கிச் சொந்த நாகரீகத்தையும் பண்பாடுகளையும் மறந்து சீரழியும் சில பெரியமனிதர்களின் குடும்பங்களுக்குத் தக்கதோர் சாட்டையடியாக இந்த நாடகக் கதையைப் படைத்த 'பேனா' என்று சொல்லப்படும் பெரியசாமி பாராட்டுக்குரியவர். பல பிரபல முன்னணிநடிகர்களை ஒன்று சேர்த்து இந்த நாடகத்தை உருவாக்கிய தயாரிப்பாளர் பாலச் சந்திரின் முயற்சி துணிகரமானது. கதிர்காமத் தம்பியின் 'செட்டிங்ஸ்' வெகு பிரமாதம் இந்த நாடகத்தில் அரங்கமைப்பில் பலபுதிய உத்திகளை இவர் கையாண்டுள்ளார். இப்போது நடைபெறும் கொழும்பு நாடகங்களில் 'தம்பி'யின் அரங்கமைப்புத்தான் முன்னணியில் உள்ளது எனலாம்.

மொத்தத்தில் 'லண்டன் வாழ்க்கை'யை ஒருதடவை அனுபவிக்கலாம். அனுபவசாலிகள் நடிப்பதால் இதையே திரைப்படமாகவும் எடுக்கலாம். இந்த நாடகம் 'லயனல்' வென்டில் இரு தினங்கள் நடைபெற்றது.

—சு. பேரன்

வேண்டுமென்றால் இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்த்திருக்க வேண்டும். முற்றும் தீர்க்க முடியாதுவிட்டாலும் ஓர் எல்லைக்குட்பட்ட அளவுக்காவது தீர்த்திருக்க வேண்டும் இவர்களுடைய கூற்றுப்படி விலைவாசிகள் ஏற்றத்தைத் தடுக்க முடியாது வேலை இல்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க முடியாது. இந்த இரண்டையும் ஒரே தடவையில் சொல்லும் நிலையில்தான் இவர்கள் இருக்கிறார்கள் அரசாங்கத்தின் கொள்கைகள் பல முக்கியமாக விவசாய உற்பத்தித் துறையிலும் கைத்தொழில் துறையிலும் பலருக்கு வேலை கொடுக்கக் கூடியதாக அமைந்திருக்கின்றதாகக் கூறப்படுகின்றது நடைமுறையில் எண்ணிக்கைகளையும் புள்ளி விபரங்களையும் பார்த்தால் இன்று வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கின்றது.

அரசாங்கம் செய்ததை எடுத்துச் சொன்னால் மட்டும் போதாது. அரசாங்கம் செய்யாததையும், செய்யக் கூடியதாக இருந்தவைகளில் செய்யாமல் விட்டவற்றை பற்றியும் நாம் ஆராய வேண்டும் விவசாயத்துறையில் இளைஞர்கள் இன்றும் நல்ல நிலங்களுக்கு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள் அவர்கள் விவசாயத்துறையில் ஈடுபட்டு இந்த நாட்டு வளத்தைப் பெருக்க ஆவல் உள்ளவர்களாக இருக்கிறார்கள் அவர்களுக்கு அரசாங்கம் இன்னும் அவர்கள் கேட்டஅளவுக்குநிலங்களை வழங்க வில்லை. நிலங்கள் இருந்தும் இளைஞர்களுக்கு நிலங்கள் வழங்கப் ஆனால் வெங்காயத்தை வெங்காயத்தை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள். பருவமல்லாத காலத்தில் வெங்காயம் குறைந்துவிட்டது என்று ஏதோ ஒரு சாட்டைச் சொல்லி வெங்காயத்தை இறக்குமதி செய்கிறார்கள். சில வேளைகளில் அவ்வாறு இறக்குமதி செய்கின்ற காலம் எங்கள் நாட்டிலே வெங்காயம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்ற காலமாகும். அந்த நேரத்தில் இந்த வெங்காய உற்பத்தியாளர்களுடைய நிலைமை படுமோசமாக மாறுகிறது. இதைம் பற்றிப் பிரஸ்தாபித்தாலும் பதில் கிடைப்பதில்லை. இப்பொழுது உற்சாகமில்லாத காரணத்தாலும் உத்தரவாதவிலையை ஏற்றிக்கொடுக்க மறுத்ததாலும் எனது தொகுதியைப் பொறுத்த மட்டிலே வெங்காய உற்பத்தி குறைந்து விட்டது.

வெங்காய உற்பத்தியிலே உத்தரவாத விலை காணாது; கொடுக்க வேண்டிய கூலி முதலியவை ஏறிக் கொண்டு வந்துவிட்டது; வெங்காய உற்பத்தி செய்வது கஷ்டம் என்று மக்கள் அதை மறந்துவிட்டு உருளைக் கிழங்கு உற்பத்தியிலே இப்பொழுது கவனம் செலுத்துகிறார்கள். இதனால் நாட்டுக்கே நட்டம் உருளைக் கிழங்கைப் போலல்லாது வெங்காயம் ஒரு நல்ல உணவு சத்து நிறைந்த உணவு நாட்டில வெங்காய உற்பத்திகுறைந்ததால் வெளிநாட்டிலிருந்து வெங்காயத்தை இறக்குமதி செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு வெளிநாட்டு செலாவணி அதிக அளவில் ஒழிக்கப்படுகிறது, இந்த ...கர குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்களே தங்களைக் காத்துக் கொள்ள தக்க ஒழுங்குகளைக் செய்து கொள்வதே சிறந்தது. மடியில் கனமிருந்தால் தான் வழியில் பயம் என்பார்கள். கூடுமானவரைபிரயாணத்தின்போது நகை போடாமலும், பணம் கொண்டு செல்லாமலும் இருப்பது நல்லது. கொள்ளைக் கூட்டத்தினர் எதிர்த்தால் உயிரை விட்டாலும் நம் பெண்மணிகளைக் காக்கும் துணிச்சல் ஆண்களுக்கு வேண்டும்.

உண்மையான தெய்வ நம்பிக்கையுள்ளவர்களுக்கு 'அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதுமில்லை' நமனுக்கும் அஞ்சமாட்டார்கள்.

0 0 0

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் யாத்திரை செய்வது இக்காலத்தில் நரகவேதனை. நிற்கவும் இடமில்லை. மூன்றாம் வகுப்பைவிட இரண்டாம் வகுப்பில் அதிக நெருக்கம்.

மின்சார விளக்குகள்எரிவதில்லை. இரவிலே ரயில்பெட்டிக்குள் ஒரே இருட்டு. மின்விசிறிகளுமில்லை. இருக்கும் இரண்டொன்றும் சுற்றுவதில்லை கக்கூஸ்களில் குழாய்களும் தாழ்ப்பாள்களும் களவுபோய் விட்டன. ரயில்வே அமைச்சருக்கு இதெல்லாம் தெரியாதா?

அதிக கூட்டத்துக்கான காரணம் பள்ளிக்கூட விடுமுறையென்றும் இலவச

---

அரசாங்கம் வெளிநாட்டு வெங்காயத்தைப் பணம் கொடுத்துவாங்கத் தயாராக இருக்கிறது. உள்நாட்டு வெங்காய உற்பத்தியாளர்களுக்கு பணம்கொடுத்து வெங்காய உற்பத்தியை ஏற்ற முறையில் வளர்க்க ஊக்கம் கொடுக்காமல், அக்கறையில்லாமலிருக்கிறது. இதுபோல சிந்தித்தால் பல துறைகளிலே உணவு உற்பத்தியைத்தூண்டுவதற்கு அரசாங்கம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்காமல் விட்டுவிட்டது, (தொடரும்)

## வெங்காய...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

சத் தலைவர் திரு. என். ரி. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் யாழ் அரசாங்கஅதிபர், விவசாய சேவைகள் இலாகா அதிகாரிகள் ஆகியோர்கலந்துகொண்டனர். திரு. சிவஞானம் தங்கள் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்னைகளை எடுத்துக்கூறியதோடு 1965-ம் ஆண்டு கொண்டுவந்த உத்தரவாத விலைக்கட்டுப்பாடு இதுவரை திருத்தியமைக்கப்படவில்லையென்பதையும் அதனால் ஏற்படும் கஷ்டங்கள்பற்றியும் ஆணையாளருக்குச் சுட்டிக்காட்டினார்

மேலும் அவர் யாழ்ப்பாணத்தில் வெங்காய அறுவடை காலத்தில் வெங்காயத்தை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தல் மேலும் நஷ்டத்தை விளைவிக்கிறதென்பதையுட குறிப்பிட்டார் இப்பிரச்சினைகள் யாவும் தீர்க்கப்பட்டுவிட்டால் உணவுப் பொருட்களில் முதன் முதலில் சுயதேவையைப் பூர்த்திசெய்யும் பொருளாக வெங்காயம் அமையும் எனவும் திரு சிவஞானம் தெரிவித்தார்.

ஆணையாளர் திரு. சேனநாயக்கா பேசுகையில்விலைத்திட்டம் திருத்தி அமைக்க வேண்டிய அத்தியாவசியத்தையும் இதற்காக உத்தரவாத விலை திட்ட ஆலோசனைக்குழு சில நாட்களில் கூடி ஆராயும் எனக் குறிப்பிட்டார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இந்த வெங்காய உற்பத்தி விவசாயிகள் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கு ஒரு தனிக்குழு அமைக்க ஆலோசனைகள் நடைபெறுவதாகத் தெரிவித்தார். இக்குழு விவசாய அமைச்சுக்கு வெங்காய உற்பத்தி விற்பனவு சம்பந்தமான எல்லாவற்றையும் தெரியப்படுத்தி சிபார்சுகள் செய்யும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஏற்பாடுகளினால் வெங்காய கொள்முதல்விலையில் விரைவில் ஏற்றம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது,


## அருணோதயக் கல்லூரி

**75-வது ஆண்டு நிறைவுவிழா**

8-9-1969 திங்கடகிழமை மாலை 6-30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

பெற்றோர், பழைய மாணவர்கள், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கல்லூரி அதிபர், ஆசிரியர்கள்.**

1729


ஆசிரியருக்குக் கடிதம்

# இளம் சமுதாயத்தினருக்கு சந்தர்ப்பம் கொடுங்கள்

இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இன்று ஜீவமரணப் போட்டிநிலையில் உள்ளார்கள். தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் தமிழர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு ஒற்றுமையாக வேண்டும். ஆனால் இத்தகைய ஒற்றுமை ஏற்படுவது சாத்தியமுமல்ல, இலகுவானதுமல்ல.

தமிழ் தலைவர்கள் ஒன்றுபட்டார்களானால் எத்தனையோ நன்மைகளைச் செய்யலாம். இந்த இருகட்சிகளும் ஒன்றுபடாது தங்கள் தங்கள் போக்கில்செல்வார்களானால் இருகட்சிகளும் விலகி இளைஞர் சமுதாயத்தை சமுதாயநலனுக்காகப் பாடுபட விட வேண்டும்

இந்தஇரு கட்சிகளும்மேற்குறிப்பிட்டவாறு செய்யாவிடில் எவராவது ஒருவர் தன்னலம் நோக்காது சத்தியாகிரக மூலம் இவர்களை வெளியேற்றுவதாகப் பயமுறுத்தி தலைவர்களிடையே ஒற்றுமையைக் கொண்டுவர வேண்டும். இவ் விரு கட்சிகளுக்கும் உள்ள வேற்றுமைகள் பல. இத் தலைவர்களை வெறுத் தொதுக்கப்படாதவாறு அவர்களின் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட வற்புறுத்த வேண்டும்.

கே. குலரத்தினம்

கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org